Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily தேசிய தினசரி

போன் 389 தபாற்பெட்டி எண், 49

மலர் ௳ யாழ்ப்பாணம். பிலவ பங்குனி 23 ஆம் நாள் ஷவ்வால் 29 (5-4-62) வியாழக்கிழமை இதழ் 54




“சதிவிசாரணைக்கு பின்

# பத்திரிகை தணிக்கை நீக்கப்படும்

## வெளிநாடுகளுக்கு சதியில் சம்பந்தமில்லை”

### சென்னையில் நீதிமந்திரி திரு. பேர்னண்டோ பேட்டி

— நமது சென்னை நிருபர் —

சென்னை, ஏப்ரல் 4

சதித் திட்ட விசாரணை முடிவுக்கு வந்துகொண்டிருப்பதாயும், விசாரணை முடிவடைந்த பின் பத்திரிகைத் தணிக்கை நீக்கப்படக்கூடும் என்றும் இலங்கை நீதி மந்திரி திரு. பி. ஸி. பெர்னண்டோ சென்னை விமான நிலையத்தில் நிருபர்களிடம் பேசும்போது கூறினார்.

திரு பெர்னண்டோ லண்டன் செல்லும் வழியில் “இந்திய ஏர்லைன்” விமானம் மூலம் சென்னை வந்தார்.

“இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் சதியில் வெளிநாடுகளின் தலையீடு எதுவும் இருக்கிறதா” என நிருபர்கள் கேட்டனர். இதுவரை கிடைத்த வாக்குமூலத்திலிருந்து அதற்கான அறிகுறிகள் தென்படவில்லை என நீதி மந்திரி அதற்குப் பதிலளித்தார்.

## நேரு மந்திரிசபை ராஜினமா

### ராஷ்டிரபதியிடம் சம்பிரதாய பூர்வமாய் சமர்ப்பணம்

புதுடில்லி, ஏப்ரல் 4

மூன்ருவது பொதுத் தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து, இன்று காலை பிரதம மந்திரி திரு. நேரு சம்பிரதாயபூர்வமாக தனது மந்திரி சபையில் ராஜினமாவை ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திரபிரஸாத்திடம் சமர்ப்பித்தார். ராஷ்டிரபதி, ராஜினமாவை ஏற்றுக்கொண்டு புதிய மந்திரி சபை அமைக்கப்படும்வரை பதவியில் இருந்துவருமாறு திரு. நேருவைக் கேட்டுக்கொண்டார்.

விரைவில் திரு. நேரு, தமது புதிய மந்திரி சபையை அமைத்துவிடுவார் என்றும் அவரது சகாக்களான திரு. மொரார்ஜி தேசாய், திரு. எஸ். கே. பட்டீல், திரு. லால் பகதூர் சாஸ்திரி, திரு. வி. கே. கிருஷ்ண மேனன் ஆகியோர் புதிய மந்திரி சபையில் நிச்சயம் இடம் பெறுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. திரு. மேனன் மீண்டும் பாதுகாப்பு அமைச்சை மேற்கொள்வார் எனத் தெரிகிறது.

சுகவீனமுற்றிருந்த பிரதம மந்திரி இன்று காலை மீண்டும் தமது உத்தியோக அலுவல்களை கவனிக்க ஆரம்பித்தார். ஆயினும் அவர் குறைந்தது இன்னும் 4 தினங்களுக்கு பூரண ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும் என டாக்டர்கள் ஆலோசனை கூறினர்.

இந்தியாவின் தலைசிறந்த வைத்திய நிபுணரும், மேற்கு வங்க முதல் மந்திரியுமான டாக்டர் பி. ஸி. ராய், இன்று காலை பிரதமரின் தேக நிலையைப் பரிசோதித்தார். சிறிது ஜுரம் இருப்பதாய், கடுமையாக வேலை செய்யாதிருக்குமாறு பிரதமர் கேட்டுக்கொள்ளப்பட்டார். தேர்தலின்போது மிகவும் கடுமையாக உழைத்ததால்தான் திரு. நேரு சுகவீனம் அடைந்திருக்கிருர் என்றும், இன்னும் சில தினங்களில் மீண்டும் பழைய நிலைமைக்கு வந்துவிடுவார் என்றும் டாக்டர் ராய் பின்பு தெரிவித்தார்.

---

## காமன் வெல்த் பிரதமர்கள் மகாநாடு

லண்டன், ஏப்ரல் 4

காமன் வெல்த் பிரதமர்கள் மகாநாடு ஒன்றை நடத்துவது பற்றி தாம், இதர பிரதமர்களுடன் தொடர்புகொண்டிருப்பதாய் பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மில்லன் காமன்ஸ் சபையில் அறிவித்தார். இம்மகாநாட்டில் ஐரோப்பியப்பொதுச் சந்தைபற்றி விவாதிக்கப்படும்.

---

## மார்கரட் இளவரசி

லண்டன், ஏப்ரல் 4

ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஜமாய்காவின் குடியரசு தின விழாவில் மார்கரட் இளவரசி, பிரிட்டிஷ் மகாராணியின் பிரதிநிதியாகக் கலந்துகொள்வார். இளவரசியுடன் அவரது கணவரும் செல்வார். 1955-ம் ஆண்டில் மார்கரட் இளவரசி உத்தியோக ரீதியில் அந்நாட்டுக்கு விஜயம் செய்திருந்தார்.

## தெ. கி. ஆசிய பூமிசாஸ்திர மகாநாடு

கோலாலம்பூர், ஏப்ரல் 4

தென்கிழக்காசிய பூமிசாஸ்திர நிபுணர்கள் மகாநாடு ஒன்று கோலாலம்பூரில் நடைபெறுகிறது. இம்மகாநாட்டில் இலங்கை சர்வகலாசாலையைச் சேர்ந்த மூன்று நிபுணர்கள் கலந்துகொள்கிருர்கள். பேராசிரியர் கே குலரத்னம், டாக்டர் ஜார்ஜ் தம்பையாபிள்ளை, டாக்டர் பி. எல். பணடிதரத்ன ஆகியோரே இம்மூவராகும்

---

## நியூகினியில் சண்டை

ஜாகர்த்தா, ஏப்ரல் 4

வடமேற்கு நியூகினியில் இந்தோனேஷியத் துருப்புக்களுக்கும் டச்சுத் துருப்புக்களுக்குமிடையே பயங்கரச் சண்டைகள் நடைபெற்றுவருவதாய் அறிவிக்கப்படுகிறது. 4 இந்தோனேஷியர்கள் கொல்லப்பட்டனர் என்றும், 3 பேர் சரணடைந்ததாயும் ஒரு செய்தி கூறுகிறது.

---

## தென்வியட்னமில் மாபெரும் தாக்குதல்

லண்டன், ஏப்ரல் 4

தென்வியட்னமில் அரசாங்கத் துருப்புக்கள் கம்யூனிஸ்டுகளுக்கெதிராய் மாபெரும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டிருப்பதாயும், இத்தாக்குதலில் ஆயிரக்கணக்கான துருப்புக்கள் பங்குபற்றிக்கொண்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. 40 கம்யூனிஸ்டுகள் இத்தாக்குதலில் கொல்லப்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

---

## ஸிரியாவில் சகஜ நிலை

டமாஸ்கஸ், ஏப்ரல் 4

ஸிரியாவில் இப்போது நிலைமை மாமூல்படி வந்திருப்பதாயும், நாட்டிலுள்ள சகல ரேடியோ நிலையங்களும் மத்திய அரசாங்கத்துடன் இணைந்து செயலாற்றுவதாயும் அறிவிக்கப்படுகிறது.

---

## ஏப்ரல் 7-ல் உலக சுகாதார தினம்

கொழும்பு, புதன்

ஏப்ரல் 7-ம் தேதி உலக சுகாதார தினத்தை முன்னிட்டு தேசிய ரீதியிலும், பிராந்திய ரீதியிலும் பல நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன.

---

## டி கால்

ரோம், ஏப்ரல் 4

பிரெஞ்சு ஜனதிபதி ஜெனரல் டி கால், இன்று ரோமாபுரியில் இத்தாலியப் பிரதமரைச் சந்தித்து ஐரோப்பியப் பொதுச் சந்தை விஷயமாகச் சம்பாஷித்தபின் பாரிஸ் திரும்பினர்.

## கொழும்பில் முஸோலினியின் புதல்வி

கொழும்பு, புதன்

முன்னுள் இத்தாலிய சர்வாதிகாரி முசோலியின் புதல்வியான சியானே சீமாட்டி கொழும்பு வந்திருக்கிருா. தேசத்துரோக் குற்றச்சாட்டுக்காக அவரது கணவரை தந்தை முஸோலினி தூக்கிலிட்டார் என்பது, குறிப்பிடத்தக்கது. அன்று முதல் அவரது புதல்வியான ஸியானே சீமாட்டி தன் தந்தையுடன் உறவாடுவது இல்லை. அவர் இறந்த போதும் தந்தையை மகள் பார்க்கவில்லை. சியானே சீமாட்டி இந்தியால் சுற்றுப்பிரயாணம் செய்தபின் இப்போது இலங்கையில் சுற்றுப்பிரயாணம் செய்யவந்திருக்கிருர்.

---

## ஈழத்து பெரியார்கள் தினம்

கொழும்பு, புதன்

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையின் கீழ் சைவ மங்கையர் கழகத்தில் நடைபெற்ற ஈழத்து பெரியார்கள் தினத்தில் தமிழ் எம். பி. க்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

## யாழ்ப்பாணத்தில் 2 மணி நேரம் மின்சாரக் கோளாறு

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்றிரவு சுமார் 2 மணி நேரம் மின்சார சப்ளையில் கோளாறு ஏற்பாட்டதன் காரணமாய்பொதுமக்கள் பெரிதும் அவதிக்குள்ளாயினர். ஆஸ்ப்பத்திரி, சினிமா தியேட்டர்கள், வீடுகள் ஆகியவை பெரிதும் பாதிக்கப்பட்டன. இரவு 7-10-க்கு அணைந்த மின்சார விளக்குகள் இரண்டுமுறை ஒரு விளடி எரிந்தபின் இறுதியில் ஒரேயடியாக அணைந்துவிட்டன. 9 மணிக்குத்தான் விளக்குகள் மீண்டும் எரியத்தொடங்கின. யாழ்ப்பாணத்தில் இவ்வாறு மின்சாரக்கோளாறு ஏற்பட்டது இது முதல் தடவையல்ல. பலமுறை இவ்விதம் நடைபெற்றிருக்கிறது. மேலும் பாராளுமன்றத்திலும் தமிழ் எம். பி. க்கள் பலர் இந்தக் குறைபாடு பற்றி சமீபத்தில் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

நகரிலுள்ள படமாளிகைகளில் முதல் காட்சிகள் இடையில் நின்று போனதாய் சில தியேட்டர்களில் நேற்று, முதல் காட்சிக்கு கொடுக்கப்பட்ட டிக்கட்டுகளை மீண்டும் இன்று உபயோகிக்கும் பொருட்டு அடையாள மிடப்பட்டு திருமபக் கொடுக்கப்பட்டன. ஒரு தியேட்டரில் நேற்று. முதல் காட்சிக்கு கொடுக்கப்பட்ட டிக்கட்டுகளுக்கான பணம் திருப்பிக்கொடுக்கப்பட்டது.

ஆஸ்ப்பத்திரியில் மண்ணெண்ணெய் விளக்குகள் உபயோகிக்கப்பட்டன.

## அல்ஜீரியாவிலிருந்து ஐரோப்பியர் வெளியேற்றம்!

### பயங்கரவாதிகளே காரணமாம்

அல்ஜியர்ஸ், ஏப்ரல் 4

அல்ஜீரியாவில் நேற்று நடைபெற்ற சம்பவங்களில் 16 பேர் கொல்லப்பட்டனர். 22 பேர் காயமடைந்தனர்.

மேலும், நூற்றுக்கணக்கான ஐரோப்பியாகள் அல்ஜீரியாவிலிருந்து வெளியேறிக்கொண்டிருப்பதாயும், ஓ. ஏ. எஸ். பயங்கரவாதிகளின் நடவடிக்கையின் காரணமாய் தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாய் அவர்கள் தெரிவிப்பதாயும் ஒரு செய்தி கூறுகிறது.

## இரத்தினபுரிக்கு மாநகரசபை அந்தஸ்து?

இரத்தினபுரி, புதன்

இரத்தினபுரி நகரசபையை மாநகரசபை அந்தஸ்துக்கு உயர்த்தவேண்டும் என்ற இரத்தினபுரி, நகரசபையினரின் தீர்மானத்தைத் தொடர்ந்து ஸ்தலஸ்தாபன அமைச்சு இதுபற்றி பரிசீலனைசெய்து வருகிறது.

நவாலி கொலைவழக்கில்

# எதிரிபற்றி அறிக்கை சமர்ப்பிக்கநீதியரசர்உத்தரவு

## 23-ம் திகதிவரை ரிமாண்ட்

யாழ்ப்பாணம், புதன் வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நடந்த நவாலி கொலை வழக்கில் தான் கைமோசக் கொலை செய்ததென்று எதிரி ஒப்புக்கொண்டதன்பேரில் அவரை நன்னடத்தைப் பிணையில் விடுதலைசெய்ய அனுமதித்த நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா இதற்கான காலத்தைக் குறித்து தீர்ப்பளிப்பதற்கு இம்மாதம் 23-ம் திகதி யாழ்ப்பாணம் பாசுகாவல் அதிகாரியை எதிரியினதும் அவரது குடும்பத்தினரதும் சம்பந்தமான அறிக்கையொன்றைச் சமர்பிக்கும்படியும் அதுவரை எதிரியை ரிமாண்டில் வைக்கும்படியும் உத்தரவிட்டார்.

1961-ம் ஆண்டு ஏப்ரல் 14-ம் திகதி நவாலி தெற்கில் நவரத்தினம் அரியபுத்திரன் என்ற அவரது மகனைக் கொலைசெய்ததாக அம்பலவாணர் நவரத்தினம் என்பவர்மீது குற்றம் சாட்டி இவ் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இருபத்தொரு வயதுடைய இறந்தவரின் மகனை திரு ஞானசம்பந்தன் சாட்சியமளித்து முடிந்ததும் கைபிழைபாடான கொலை நடைபெற்றதென்பதை எதிரி ஒப்புக்கொண்டார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதியரசர் பின்வருமாறு தெரிவித்தார்:-

இங்கு சாட்சியமளித்த 12 வயதுச் சிறுவனை ரவீந்திரநாதனின் சாட்சியம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. உண்மைச் சம்பவத்துக்கு மாறுகக் கூட்டியும் குறைத்தும் அவர் சாட்சியமளித்துள்ளார்.

எதிரி சைவக் குருக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர். நல்லமுறையில் நடந்துகொண்டிருக்கிருர். இறந்த மகன் அவரது குடும்பத்திற்கு இழுக்கைத் தேடியதையும் காப்பாற்றி வந்திருக்கிருர். திருஞானசம்பந்தனின் சாட்சியத்திலிருந்து இப்பொழுதும் வரது குடும்பத்திற்கு உதவியளித்துக்கொண்டு வருகிருர் என்பது தெரிகிறது.

இந்நிலையில், தொடர்ந்து இவ்வுதவியைச் செய்வீரா? என்று நீதியரசர் எதிரியைக் கேட்டபோது தாம் அதே எண்ணத்தோடுதான் இப்பொழுதும் இருப்பதாகத் தெரிவித்தார்.

இதன்பின் நீதியரசர் அவரை நன்னடத்தையில் செல்ல அனுமதியளித்துப் பாதுகாவல் அதிகாரியின் அறிக்கையை இம்மாதம் 23-ம் திகதிக்கு சமர்ப்பிக்கும்படியும் அதுவரை அவரை ரிமாண்டில் வைக்கும்படியும் உத்தரவிட்டார்.

முடிக்குரியதரப்பில் முடிக்குரியவழக்கறிஞர் திரு.பி.நகுலேஸ்வரன் ஆஜரானர்.

எதிரிதரப்பில் திரு. என். சத்தியேந்திரா திரு. எஸ். வி. கதிரவேலு, திரு. வி. நடராசா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர் திரு. பி. பாலவடிவேல் எதிரிசார்பில் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

## இன்று உங்கள் பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்-

பிலவ ஆண்டு பங்குனித் திங்கள் 23-ந் திகதி வியாழக்கிழமை (5-4-62) ஹிஜ்ரி வருடம் 1381 ஷவ்வால் மாதம் 29-ம் பிறை.

இன்று பிரதமைத்திரி இரவு 11-31வரை. பின்னர் துதியை. மாலை 4-14 வரை ரேவதி. பின்னர்அச்சுவினி. சித்தர்மிர்த யோகம். இராகுகாலம் பிற்பகல் 1-38 முதல் 3-08 மணி வரை.

அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சி நாளாகையால் சுபகருமங்களை இவர்கள் மேற்கொள்ளலாகாது.

ரேவதி—அச்சுவினி: இன்று இவர்களுக்கு பிதுருவழி சிந்தனை, பெரியோர் தொடர்பு, பூமிசிந்தனை, சுபமுயற்சி ஆகியன காணப்படுகின்றன.

மேடம்: பிதாவழிநினைவு, அலைச்சல், தருமசிந்தனை.

இடபம்: மாதுருவழி நினைவு, பணவரவு, கடன்நிவர்த்தி.

மிதுனம்: கரும வெற்றி, தெய்வவழிபாடு, சுபகாரிய சித்தி.

கடகம்: தொழிற்தாமதம், பிதுருவழிசிந்தனை, அலைச்சல்.

சிங்கம: சுபசெய்தி, தெய்வ சிந்தனை, மாதுருவழிஉதவி.

கன்னி: குடும்பசுகம், வித்தை மேன்மை, மதாவழி நினைவு.

துலாம்: உழைப்புநலம், தயாதிகலகம், தைரியம்.

விருச்சிகம்: வைத்தியச் செலவு, சுபகருமம், செய்காரிய தடை.

தனு: பிதாவழிநிறைவு, குடும்பநலம், அலைச்சல்.

மகரம்: குடும்பசச்சரவு, மாதுருவழிசிந்தனை, சஞ்சலம்.

கும்பம்: தெய்வவழிபாடு. சத்துருதடை, தாய்வழிஉதவி,

மீனம்: பிதாவழி சிந்தனை. வித்தைமேன்மை, நன்முயற்சி,

## ஆசிரியர்களுக்கு அவமானம்

பத்தேகம, புதன்

"தோட்டத் தொழிலாளர்கள்கூட தமது தொழிற்சங்க உரிமைகள்பற்றி உணர்ந்து கொண்டிருக்கும்போது அதிக மான ஆசிரியர்கள் தமது உரிமைகள்பற்றியும் தமக்கு இருக்கவேண்டிய சலுகைகள்பற்றியும் உணராதிருப்பது அவமானமடையவேண்டியதொரு காரியமாகும்" என ஆங்கில உதவி ஆசிரியர் சங்க பொதுக் கூட்டத்தில் பேசிய சமஸ்த லங்கா ராஜீய ஜேய்ஸ்தஉப்பு குரு சங்கத்தின் தலைவர் திரு. கே. டபிள்யூ. தொடித்துவாக்கு குறிப்பிட்டார்.

## வரி விளம்பரம்

### தேவை

கமத்தொழில், நிலம் பண்படுத்தல்' தேகஉழைப்பு, கட்டட வேலை, மரவேலை, முதலியவற்றில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஈடுபடத் தொழிலாளர் தேவை. பயிற்சிபெற்றவர்களும், பயிற்சியற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். தகுதிக்கேற்ப தகுந்த ஊதியம் கிடைக்கும். நிர்வாகி, ஈழத் தொழில்காண் நிலையம், தபாற் பெட்டி எண் 1174, கொழும்பு.

### தேவை

நாவற்குளி கிராமசபைப் பகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சயாசத்திற்கு விற்பனையாளர் ஒருவர் தேவை.

**தகைமைகள்:** எட்டாம்வகுப்பு அல்லது அதற்குச் சமமான தராதரம்உள்ளவர். 20 தொடக்கம் 35வயதுவரை உள்ளவர்.

**பிணை:** ரொக்கம் [illegible]00ரூபா.

**சம்பளம்:** எல்லாம் உட்பட மாதம் 60 ரூபா.

விண்ணப்பங்கள் 21-4-62-ந் திகதி காலை 10 மணிக்குமுன் சமாசத் தலைவருக்கு அனுப்பப்படவேண்டும். க. சி. சுந்தரம், காரியதரிசி.

### உங்கள் நோய்

நடைப்படுத்த உத்தரவாதம் [illegible]ழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாத்களுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

உலக சுகாதாரஸ்தாபனத்தைச்சேர்ந்த

# தொற்றுநோய் ஆலோசகர் இலங்கை விஜயம்

## இளம்பிள்ளைவாதம்பற்றி அறிக்கை சமர்ப்பிப்பார்

கொழும்பு, புதன்

இலங்கையில் இளம்பிள்ளை வாதநோய்ப் பிரச்சினைபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி உலக சுகாதார ஸ்தாபனத்தைச்சேர்ந்த டாக்டர் ஏ. சாகிராவை புதுடில்லியிலுள்ள இந்த ஸ்தாபனத்தின் தென்கிழக்காசிய டைரக்டர் டாக்டர் பி. மணி இங்கு அனுப்பியுள்ளார். டாக்டர் சாகிரா தென்கிழக்கு ஆசிய தொற்றுநோய் சம்பந்தமான ஆலோசகராவர்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வந்துசேர்ந்த இவர் கொழும்பு ஆஸ்பத்திரி குழந்தைகள் சிகிச்சை நிலையத்தை பார்வையிட்டார். மாலையில் பேராசிரியர் சி. சி. டி' சில்வாவுடன் சுகாதார அமைச்சரைக் கண்டு இளம்பிள்ளை வாதம் பற்றியும், தடைசெய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் பேசினர். இன்று இவர் இலங்கையைவிட்டுச் செல்கிருர்.

இதுவரையில் கொழும்பு குழந்தைகள் சிகிச்சை நிலையத்தில் 244 நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தங்கள் இருப்பிடத்தை சரிவர அடையாளம்காட்டும்பொருட்டு இப்பிள்ளைகளின் பெற்ருேர் அரிசிக் கூப்பன்களைச் சமர்ப்பித்தனர். 1500 பிள்ளைகள் காலையிலும், சிறுதொகையினர்மாலையிலும் நேற்று பால்கட்டுவித்தனர்.

மேல்மாகாணத்தில் இளம்பிள்ளை வாதநோய் தடுப்புப் பிரசாரத்தை விஸ்தரிக்கும் வகையில் சுகாதார அமைச்சு ஒழுங்குகள் செய்துள்ளது, இத்துடன் கண்டி, காலி, யாழ்ப்பாணம், குருநாக்கல், நுவரேலியா, தெகிவளை, கல்கிசை, நீர்கொழும்பு ஆகிய 8 மாநகரசபை எல்லைக்குள்ளும் இதற்கான இயக்கத்தை விஸ்தரிக்க ஏற்பாடாகியுள்ளது.

களுத்துறை மாவட்டம் இதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது ஏனெனில் சென்ற செப்டம்டரில் இதுசம்பந்தமான தடுப்பு இயக்க வேலைகள் இங்கு நடைபெற்றன.

பாடசாலைகள் மூடப்பட்ட பகுதிகளில் குழந்தைகள் சிகிச்சை நிலையங்கள் மூலமே பால் கட்டும்வேலை நடைபெறுகிறது.

---

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் நாவலர் இளம் விவசாயிகள் கழகத்தின் சார்பில் இந்திய பிரசாரக் குழுவினரால் இம்மாதம் 7-ம்திகதி இரவு 7 மணிக்கு வண்ணர் பண்ணை ஐயனர்கோவில் வீதியில் படக்காட்சி காண்பிக்கப்படும்.

இப்படக்காட்சியில் தொழில் சம்பந்தமான விபரங்களும் விவசாய சம்பந்தமான காட்சிகளும் காண்பிக்கப்படும்.


அம்மா எனக்கு தினந்தோறும் மாமைட் தருகிறதால் வகுப்பிலும் விளையாட்டுக் களத்திலும் நான் சுறுசுறுப்பாய் இருக்கிறேன்



நாம் யாவரும் நன்ருய் சாப்பிடுகிருேம். அதிக சக்தியும் பலமும் உள்ளவர்களாய்இருக்கிருேம். பலத்திற்கும் வீர்யத்திற்கும்உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒரு பாகமாக நீங்கள் மாமைட்டை தினசரி அருந்தி வரவேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானல் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சுப் கறி முதலியவற்றில் சேர்க்கும பொழுது அதிகப்படியானருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்.




# மாமைட்

# ‘உள்நாட்டுத் துணிகளையே உபயோகியுங்கள்’

## மந்திரி கலுகல்ல கோரிக்கை

கேகாலை, செவ்வாய்

“சிறுசிறு பூசல்களை ஒருபுறமொதுக்கிவைத்துவிட்டு நாட்டின் பொதுநலனுக்காக நாம் உழைக்க வேண்டும்.” என்று போக்குவரத்து மராமத்து மந்திரி திரு. பி. பி. ஜி.கலுகல்ல இங்கு கைத்தொழில் பொருள் விற்பனவு நிலையத்திறப்புவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. கலுகல்ல மேலும் கூறியதாவது:-

1956ம் ஆண்டுக்குமுன் இந்த நாட்டை ஆட்சிசெய்தவர்கள் நாட்டின் கைத்தொழில் அபிவிருத்திபற்றிச் சிந்திக்கவேயில்லை. வெளிநாட்டுப்பொருள்கள் தாராளமாக இங்குவந்து குவிவதற்கு அவர்கள் அனுமதியளித்தனர். எங்கள் செல்வத்தை அந்நியர்கள் சுரண்டிச் செல்லவும், நாங்கள் அந்நியர்களின்ஊழியர்களாகவும் இருப்பதற்கு முன்னர் ஆட்சிசெய்தவர்கள் அனுமதியளித்தனர்.

காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்ததும் எல்லோரும் தேசிய உடை அணிவதற்கு ஊக்கமளித்தார். அந்நிய ஆடைகளை ஒதுக்கிவிட்டு எங்கள் நாட்டில் எங்கள் மக்களால் உற்பத்தி செய்யப்படும் ஆடைகளையே நாம் அணியவேண்டும். உள்நாட்டுப் பொருள்களை அபிவிருத்திசெய்யவும், உள் நாட்டிலுற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதிக்கவுமே எமது அரசாங்கம் முயற்சிசெய்கிறது.

இதன்மூலம் எமது பணம் வெளியில் செல்லாமல் தடுப்பதுடன் உள்நாட்டின் பொருளாதாரநிலைமையைச் சீர்செய்யவும் முடியும்.”

தனிப்பட்ட கைத்தொழிலாளர்களுக்கு கடன் உதவிசெய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் திரு. கலுகல்ல தெரிவித்தார்.

## ரஷ்யா செல்லும் பார்லிமெண்டரி தூதுகோஷ்டி

கொழும்பு, புதன்

ரஷ்யா செல்லவிருக்கும் பார்லிமெண்டரி தூதுகோஷ்டியில் கலந்துகொள்பவர்களை இவ்வாரம் அரசாங்கம் தேர்ந்தெடுக்கும்.

தூதுகோஷ்டியில் கலந்துகொள்ளும் விஷயம்பற்றி சகல எம். பி. க்களுக்கும், அரசாங்கப் பிரதம கொறடா திரு. ஜே. டி. வீரசேகரா கடிதம் அனுப்பியுள்ளார் எனத் தெரிகிறது. இவ்வாரம் முடியுமுன்னர் தூதுகோஷ்டியில் கலந்துகொள்ளப்போபவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் எனப் பிரதம கொறடா கூறியுள்ளார்.

சபாநாயகரைவிட, அரசாங்க அங்கத்தவர்கள் ஐவரும், எதிர்க்கட்சி எம். பி.க்கள் ஐவரும் தேர்ந்தெடுக்கப்படுவர் எனத் தெரிகிறது.

## காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு

லண்டன், ஏப். 4

ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் சேர்வதற்கான இறுதிப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் காமன்வெல்த் பிரதம மந்திரிகளின் மகாநாடு கூட்டப்படுமென்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் மாக்மிலன் தெரிவித்தார்.

# மணமாகி 3 மாதங்கள்;

## மரணத்தை அணைத்துக்கொண்டார்

பாணந்துறை, புதன்

‘சிறிதளவு அனுதாபமும் புரிந்து கொள்ளும் மனப்பான்மையும் இருந்திருந்தால் உமது மகனின் ஆனந்தமயமான திருமண வாழ்வை நீர் பார்த்திருக்கலாம். இப்பொழுது உமது மகனின் வாழ்வே உம்மால் பாழாகிவிட்டது. இந்தச் சம்பவம் ஏனைய பெற்றோருக்கு ஒரு நல்ல பாடமாக இருக்க வேண்டும்.’

இவ்வாறு திடீர் மரணவிசாரணை அதிகாரி தெரிவித்தார்.

இ. போ. ச.வில் கடமையாற்றிவந்த 23 வயதான ஒருவர் மண்ணெண்ணை குடித்துத் தாமே தீப்பற்ற வைத்துத் தற்கொலை செய்து கொண்டது சம்பந்தமாக பிரேத பரிசோதனை செய்து தீர்ப்பளிக்கையிலேயே மேற்கண்டவாறு மரணவிசாரணை அதிகாரி கூறினார்.

இறந்தரின் மனைவி சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

நாமிருவரும் 3 வருட காலமாக ஒருவரை ஒருவர் மனமாரக் காதலித்து வந்தோம். எவ்வளவோ பிரயத்தனம் செய்தே எமது திருமணத்துக்கு எனது பெற்றோரின் சம்மதம் பெற்றேன்.

சென்ற வருடம் டிசம்பர் 24-ம் திகதி இருவருக்கும் திருமணம் நடந்தது. இதன் பின்னர் நாங்கள் எனது பெற்றோரின் வீட்டிலேயே வசித்து வந்தோம்.

சம்பவம் நடந்த தினத்துக்கு முதல்நாள் எனது கணவரின் தந்தை எமது வீட்டுக்கு வந்து எனது கணவரைக் குறைகூறிப் பேசியதோடு தாம் இனிமேல் எமது வீட்டுக்கு வரப்போவதில்லை என்றும் கூறிவிட்டுச் சென்றார்.

இறந்தவரின் தாய் தெரிவித்ததாவது:

எனது மகன் ஒரு போத்தல் மண்ணெண்ணையைக் கொண்டு வந்து தூம்விளக்கு ஒன்றைப் பழுதுபார்க்கத் தொடங்கினர். எனது மகன் ஏதேனும் தனக்குக் கெடுதி விளைவிக்கக்கூடிய காரியம் செய்துவிடுவானே என்ற சந்தேகத்தில் நான் மண்ணெண்ணையை எடுத்துச் சென்றேன். சிறிது நேரத்தின் பின்னர் எனது மகனின் தேகத்தில் தீபற்றிக் கொண்டு எரிவதைப் பார்த்தேன். உடனே அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம்.

எனது திருமணம் பற்றி தனது தந்தை விரும்பாததாலும் இதனால் வாழ்வதில் பிரயோசன மில்லாதிருப்பதாலும் தாம் தற்கொலை முயற்சி எடுத்துக் கொண்டதாக இறந்தவர் டாக்டரிடம் கூறியதாக விசாரணையின் போது தெரிவிக்கப் பட்டது.

விசாரணையின் முடிவில் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

## தொழில் உதவி கமிஷனர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் உதவித் தொழில் கமிஷனர் திரு. வி. சுப்பிரமணியம் இம்மாதம் 2-ம் திகதி தொடக்கம் பதுளைக்கு அதே உத்தியோகத்தில் மாற்றஞ்செய்யப்பட்டுள்ளார்.

திரு. இ. சி. பொன்னையா யாழ்ப்பாணம் புதிய உதவி தொழில் கமிஷனராக இடமாற்றம்பெற்று இங்கு வந்துள்ளார்.

# பர்மாவிலிருந்து சீனு அரிசி அனுப்பும்

கொழும்பு, புதன்

சீனுவில் உணவுப் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் சீன-இலங்கை ரப்பர், அரிசி வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்கு வந்து சேர வேண்டிய அரிசியில் தடை ஏற்படமாட்டாதென்று சீன அரசாங்கம் இலங்கைக்கு உறுதியளித்துள்ளது.

வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்கு சீனு அனுப்பவேண்டிய அரிசியை பர்மிய அரசாங்கத்தின்மூலம் பர்மாவிலிருந்து அனுப்புவதாக சீன அரசாங்கம் இலங்கைக்குத் தெரிவித்துள்ளது.

பர்மாவிடமிருந்து சீனு வாங்கிய 20,000 தொன் அரிசியை முதலில் இலங்கைக்கு அனுப்புவதாக சீனு தெரிவித்துள்ளது.

## பிக்குகளுக்கு தனி சர்வகலாசாலை

கொழும்பு, புதன்

சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு பிரிவினசர்வகலாசாலைகளில் ஒன்றை பௌத்த பிக்குகளுக்காக மட்டும், பௌத்த பிக்குகள் தங்கியிருந்து படிக்கக்கூடிய சர்வகலாசாலையாக மாற்றும்படி சாசன அரக்ஷக பௌத்த மண்டலம் எனப்படும் பௌத்த ஸ்தாபனம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

இவ்விதம் செய்தால் புத்த புராணின் போதனைகளிலும் பௌத்த தர்மம் பற்றியும் பௌத்த பிக்குகள் ஆராய்ச்சி செய்யலாமென பௌத்த மண்டலம் தெரிவித்துள்ளது.

# ‘மொழிக்கொள்கையை நிறைவேற்றுவோம்’

## நீதி மந்திரி அறிவிப்பு

கலஹெட்டி, செவ்வாய்

“இந்த அரசாங்கம் மக்களின் நலனுக்காக உழைக்கிறது. எனவே மக்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும்” என்று நீதி மந்திரி திரு சாம். பி. ஸி. பெர்னண்டோ கலஹெட்டியா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சிரமதானக் கூட்டமொன்றில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

அரசாங்கத்தின் அலுவல்களைச் சிங்களத்தில் நடத்துவதற்கு காலஞ் சென்ற பிரதமரின் மொழிக் கொள்கையை இந்த அரசாங்கம் அமுல் நடத்துகிறதென்று திரு. சாம். பி. ஸி. பெர்னண்டோ கூறினர்.

“இதற்கு சிறு எதிர்ப்பு இருக்கிறது. என்றாலும் காலஞ் சென்ற பிரதமரின் மொழிக் கொள்கையை நிறைவேற்றுவதென்று அரசாங்கம் உறுதி பூண்டிருக்கிறது” என்று நீதி மந்திரி தெரிவித்தார்.

பாடசாலைகள் எடுக்கப்பட்ட சமயத்தில் சிலர் மக்களைத் தவறுன வழியில் திருப்ப முயன்றனரென்றும் அவர்கள் இப்பொழுது தங்கள் தவறை உணர்ந்துகொண்டனரென்றும் நீதி மந்திரி கூறினர்.

செனட்டர் எம். பி. டி' சொய்சா பேசுகையில் சிரமதான இயக்கம் இலங்கைக்குப் புதிதல்லவென்றார்.

“உலகிலுள்ள சில ஜனநாயக நாடுகளுள் இலங்கையும் ஒன்று. இலங்கை ஒரு ஜனநாயக நாடாக இருப்பதனால் தான் திரு. பண்டாரநாயக்காவின் கொலைக்குக் காரணமானவர்கள் இன்னும் உயிருடனிருக்கின்றனர்” என்று செனட்டர் எம். பி. டி' சொய்சா கூறினர்.

## திரு. ஜினதாசா நியமனம்

கொழும்பு, புதன்

திறைசேரிக் காரியதரிசியும் நிதி அமைச்சின் பதில் நிரந்தரக் காரியதரிசியுமான திரு. எச். எஸ். அமரசிங்கா வெளிநாட்டிலிருந்து திரும்பும்வரை கல்வி, ஒலிபரப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எச். ஜினதாசா தமது கடமைகளுடன் திறைசேரிக் காரியதரிசியாகவும் நிதியமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாகவும் கடமையாற்றுவார்.

## ஏழைக்கு உதவ கிராமமக்கள் முயற்சி

தெனியாயா, புதன்

எச். ஆர். ஜுவானிஸ் (42) என்ற சலவைத் தொழிலாளி தமது மண் குடிசையை அபாயகரமான நிலையில் விட்டுவிட்டு மரணமானர்.

கணவனிறந்த கவலை ஒருபுறம் தமது 6 குழந்தைகளையும் காப்பாற்றுவது எவ்விதம் என்ற கவலை மற்றொருபுறம் இத்தனையும் சேர்ந்து நிமிர்ந்து பார்த்தால் கூரை ஒன்று தலையில் சரிந்துவிழுமோ என்ற ஏக்கம் கரோச்சினவை மேலும் வேதனைப்படுத்தியது.

திக்கற்றுத் தவித்த கரோச்சினவுக்கு கடவுள்போல் கை கொடுத்துக் காப்பாற்ற அப்பகுதி ஆலயத்திலுள்ள கெட்டவெல தர்மவாசாவும், கல்லூரி ஆசிரியரான திரு. ஆர். அமரதாசாவும் முன்வந்தனர்.

கதியற்றவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வீடுவீடாகச் சென்று ரூ. 300 சேர்த்தனர். விரைவில் கட்டிமுடிப்பதற்கான ஒழுங்குகளும் நடைபெறுகின்றன. இப்பகுதிமக்கள் இந்த சிரமமான இயக்கத்தில் பெரும் அக்கறைகொண்டு உழைத்துவருகின்றனர்.

## 20 பேருக்கு இளம்பிள்ளைவாதம்

யாழ்ப்பாணம், புதன்

இளம்பிள்ளை வாதத்தினல் யாழ்ப்பாணத்தில் இதுவரையில் 20 பேர் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் பெரியாஸ்பத்திரியில் குழந்தைகள் சிகிச்சைநிலையத்தில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## கத்திக்குத்துக்கு இருவர் பலி

மீரிகம, புதன்

டபிள்யூ.எஸ். டேவிட் நோனு என்பவரும், 6 பிள்ளைகளுக்குத் தந்தையான குணவர்த்தன என்பவரும் கத்திக்குத்துச் சம்பவமொன்றில் காயமுற்று மரணமானர்கள். இது சம்பந்தமாக இசலகமவைச் சேர்ந்த சியாடொறிஸ் என்பவரை, மீரிகம பொலிஸ் கைதுசெய்துள்ளது.

# கள்ளக் கடத்தலைத் தடுக்க பேச்சு வார்த்தை

## இந்திய இலங்கை அரசாங்கங்கள் மேற்கொள்ளும்

கொழும்பு, புதன்

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கும் அங்கிருந்து இங்கும் கள்ளக் கடத்தல் செய்வதைத் தடை செய்யும் நோக்கத்துடன் இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடன் விரைவில் பேச்சு வார்த்தை நடத்தும். இந்தியாவுக்கு கள்ளக் கடத்தல் செய்தபோது பிடிக்கப்பட்ட பொருள்களில் விதிக்கப்பட்ட குற்றப் பணமாக இந்திய சுங்க இலாகா ரூ. 75 லட்சம் பெற்றுள்ளது.

சாராயம், கைக்கடிகாரம், தகரத்திலடைக்கப்பட்ட பொருள்கள் ஆகியவையே அதிகமாக இலங்கையிலிருந்து கடத்தப்படும் பொருள்களெனத் தெரிய வந்துள்ளது. சுங்க இலாகா அதிகாரி இதுபற்றித் தெரிவித்ததாவது:-

‘இங்கிருந்து கடத்தப்படும் பொருள்கள் இந்தியாவில் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. கடத்திச் செல்பவர்கள் தாம் விற்ற பொருள்களுக்கு இந்திய நோட்டுக்களைப்பெற்று இங்கு அவற்றை அதிக விலைக்கு விற்கிறார்கள். இந்தக் கள்ளக் கடத்தலைத் தடை செய்வதற்காக பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சினல் கூட்டப்படவிருக்கும் இம்மகாநாட்டில் உயர்தர பொலிஸ் அதிகாரிகளும் கடற்படை, ராணுவம் ஆகிய படைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்துகொள்வார்கள்.

இதன் பின்னர் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஒரு தூதுகோஷ்டி சென்று இந்திய அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தும்.

## குஸ்தி வீரர் மரணமானர்

நியூயோர்க், ஏப்ரல் 4

பென்னிபாரெட் என்னும் பிரபல குஸ்திவீரர் தமக்குப் புகழீட்டிய குஸ்திப் போட்டி ஒன்றின் பின்னர் மரணமானர். சுமார் பத்து நாட்களுக்குமுன் நடைபெற்ற குஸ்திப் போட்டியில் அவர் உலகப் புகழ்பெற்றார். எமிலி கிரிபித் என்பவருடன் நடந்த இப் போட்டியில், 12 ஆட்டம் விளையாடிய பென்னிபாரெட் மூர்ச்சையுற்று விழுந்தார். இதற்குப் பின்னர் அவர் பிரக்ஞை தெளியவில்லை.

மாடிஸன் சதுக்கத்தில் நடைபெற்ற இவரது இறுதி ஆட்டங்களைப் பார்க்கப் பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்றிருந்தனர். பல்லாயிரம் மக்கள் டெலிவிஷனிலும் பார்த்துக் களித்தனர்.

---

வாஷிங்டன், ஏப். 4

பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலன் இம்மாதம் 28-ந் திகதி அமெரிக்க ஜனதிபதி கென்னடியைச் சந்தித்துப் பேசுவார்.

## இ. போ. ச. பஸ்களில் திருட்டு

மாத்தளை, புதன்

மாத்தளைக்கும் கண்டிக்குமிடையில் செல்லும் பஸ்களில் திருட்டுக்கள் சர்வ சாதாரணமாக நடைபெறுவதாக மாத்தளைப் பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்த வார முற்பகுதியில் ஒரேநாளில் இரு திருட்டுக்கள் நிகழ்ந்தன. ஒரு வயோதிபர் 50 ரூபாய்களைப் பறிகொடுத்தார். மற்றொருவர் 8 கொத்து அரிசியைப் பறிகொடுத்தார். இதற்கு அடுத்தநாள் ஒருவர் ஒருபோத்தல் சாராயத்தைப் பறிகொடுத்தார்.

மணி வாக்கு

"அனுபவம் என்பது திறமையின் அணிகலனாகத் திகழ்வதாகும்."

ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு பங்குனி மீ 23 உ. (5-4-62)

## யாழ்ப்பாண மேயர்

யாழ்ப்பாண மாநகரசபையின் புதிய மேயர்மீது இம்மாதம் 10ம் திகதி நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்துக்கு வரவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச்செய்தியைக் கேட்டு யாரும் மகிழ்ச்சியோ, பெருமையோ அடைய முடியாது.

புதிய மேயரைப் போட்டியில்லாமல் தெரிவு செய்ய வேண்டுமென நாம் முன்னரும் இங்கு எழுதியிருந்தோம். அதே போல போட்டியின்றி ஏகமனதாக மேயர் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நடைபெற்று நாற்பதே நாட்களுக்குள் புதிய மேயர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வர நேரிட்டது சபையின் கௌரவத்தையோ யாழ்ப்பாண நகரின் பெருமையையோ உயர்த்த முடியாது.

இத்தீர்மானம் கொண்டுவருவதற்கான காரணங்களைப் பற்றி நாம் இங்கு ஆராய முற்படவில்லை. அது எமது நோக்கமுமாகாது. ஆனால், ஏகமனதாக மேயராய்த் தெரிவு செய்யப்பெற்ற ஒருவரை ஒரு சில வாரங்களுக்குள் நீக்க முற்படுவது நகரின் புகழுக்கு நல்லதல்ல என்பதையே நாம் இங்கு குறிப்பிடவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

தனிப்பட்டவர், அல்லது கட்சி காரணங்களைக் கொண்டு நாம் இதனை இங்கு எழுதவில்லை. மேயரை அடிக்கடி மாற்றுவதால் நிர்வாகம் ஸ்திரப்பட முடியாமல் சீர்குலையவும் செய்யலாம்.

இதே சமயம் மேயராகத் தெரிவு செய்யப்பட்டவர் கட்சி விருப்பு வெறுப்புகளின்றி எல்லோருக்கும் பொதுவானவராக இருந்து தமது கடமைகளைச் செய்ய முற்பட்டாலே பலரின் ஒத்துழைப்பைப் பெற்றுத் தமது பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்ற முடியும்.

நகர பிதாக்கள் மிகப் பொறுப்புள்ளவர்கள். கண்ணியம் மிக்கவர்கள். நகரின் நன்மையைக் கருதி இச்சிக்கலைப் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து சமரசமான தீர்வு காண முயலுவார்களென நம்புகின்றோம். இப்போதும் காலம் தாழ்ந்து விடவில்லை.

## பயிற்சி அவசியம்

எந்தத் தொழிலுக்கும் பயிற்சி அவசியமென்பதை நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கொழும்பில் நடைபெறும் விஞ்ஞான, தொழில் ஆராய்ச்சிக் கழகக் கருத்தரங்கத்திற் பேசும்போது குறிப்பிட்டிருந்தார். இந்நாட்களில் பயிற்சி பெறாமலே எந்தத் தொழிலையும் சமாளித்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் மக்களிடையே ஏற்பட்டுவருகின்றது. ஒரு தொழிலில் ஈடுபட முன்னர் அத்துறையில் போதியளவு பயிற்சியிருந்தால் தான் முன்னேற்றம் ஏற்படும்.

அரசாங்க சேவையில் ஈடுபடுபவர்களாயினும் சரி, தனியார் துறைகளிற் சேர்ந்து உழைப்பவர்களாயினும் சரி, அனைவருக்கும் பயிற்சி மிக அவசியமாகும். பயிற்சி பெறாமல் சிறந்த நிர்வாகிகளாகவும் தொழில் துறைத் தலைவர்களாகவும் விளங்க முடியாது. பிரிட்டன், அமெரிக்கா போன்ற வெளி நாடுகளில் பஸ் கண்டக்டர்களுக்குக் கூட பயிற்சியளிக்கப்படுகின்றது. அவர்கள் தமது தொழிலைப் பக்குவமாகவும் கண்ணியத்துடனும் நிறைவேற்றிப் பொது மக்களின் நம்பிக்கையைப் பெறுகின்றனர்.

இலங்கையில் இத்தகைய பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு உழைப்பவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவேண்டிய அவசியத்தை நிதி மந்திரி வற்புறுத்தியிருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கது. சமீபத்தில் இலங்கைக்கு வந்து கிராமாபிவிருத்தி இயக்கம் செயற்பட்டு வருவதை நேரில் அறிந்த ஐ. நா. மதிப்பீட்டுச் சபையினரும் இத்துறையில் உழைப்பவர்களுக்குப் பயிற்சி மிக அவசியமென்பதைத் தமது அறிக்கையில் எடுத்துக் காட்டியிருந்தனர். அரசாங்க ஊழியர்களாயினும் சரி, கிராமாபிவிருத்தியில் ஈடுபட்டு உழைக்கும் சாதாரண மக்களாயினும் சரி, அனைவருக்கும் பயிற்சியளிக்கப்பட்டால் முன்னேற்றம் ஏற்பட ஏதுவாகும்.

# நாட்டுக்கு நற்பணியாற்றிய திரு. அருளம்பலம்

— 'காவோலை' —

கனிந்த இதயமும் தெளிந்த சிந்தனையும் படைத்தவர் சமீபத்தில் காலஞ்சென்ற திரு. அ. அருளம்பலம். அவர் நல்ல ஒரு பேச்சாளரும் எழுத்தாளருமாவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் இவர் அழகாக எழுதியும் பேசியும் வந்தார். இத்துறைகளில் இவர் வன்மை மிக்கவர். இரக்கமும் தயவும் செறிந்த அவரின் சொற்பொழிவுகள், கேட்பவருக்கு மிகுந்த தெம்பு ஊட்டுபவை. எவரிடமும் காணப்படாத சில நற்குணங்கள் அவரிடம் நிறைந்து காணப்பட்டன. இத்தகைய ஒருவர் எமது இனத்துக்கே பெருமை தந்தார் எனலாம். எமது இனத்தவர்களுக்குமட்டுமன்றி இலங்கை முழுவதுக்குமே இவர் பெருமை தந்துள்ளார் என்றால் அது மிகையாது. ஒரு சிறந்த இந்துவாகவும், சிறந்த தமிழனாகவும் வாழ்ந்ததுமட்டுமல்லாமல் சிறந்த இலங்கை வாழ் பிரஜையாகவும் அவர் வாழ்ந்தார்.

இவரது மறைவு பொதுமக்களுக்கு ஒரு பெரும் நஷ்டமாகும். நல்ல மனுஷனாக வாழ்ந்து அவர் நாட்டுக்குச் சேவை செய்துள்ளார். அவரது நல்வாழ்க்கை ஏனையவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் அமைந்தது.

### சிறந்த சேவை

யாழ்ப்பாணத்து இந்துக்களின் முயற்சிகள் பெரும்பாலானவற்றுக்கு இவரின் சிறந்த சேவை கிடைத்தது. சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக் கல்லூரிகள், இந்துசாதனம் ஆகியவற்றுக்கு இவர் தம்மால் இயன்ற அளவுக்கு உதவி புரிந்தார். இவருடைய தாய்வழிப் பேரனார் திரு. ஏ. தில்லையம்பலம் அவர்கள் இந்த ஸ்தாபனங்களின் கர்த்தாக்களில் ஒருவர். இவரது தந்தையார் காலஞ்சென்ற திரு. அம்பலவாணர் அவர்கள் சைவ பரிபாலன சபையின் தலைவராகக் கடமையாற்றினர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபையின் காரியதரிசியாகவும், நிருவாகியாகவும் திரு. அம்பலவாணர் விளங்கினர்.

தந்தையாரைப் போலவே திரு. அருளம்பலம் அவர்களும் இந்த இந்துமத ஸ்தாபனங்களில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். இந்துக்கல்லூரி அதிகார சபையின் காரியதரிசியாகவும், நிருவாகியாகவும் இவர் கடமையேற்றார். திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி முயற்சிகளிலும் இவர் பெரிதும் ஈடுபட்டிருந்தார். தென்னிந்திய சைவ சித்தாந்த சமாஜத்திலும் இவர் ஒரு பிரபல அங்கத்தவராக இருந்துவந்தார்.

### சைவ பக்தன்

திரு. அருளம்பலம் சிறந்த பக்தன். சைவசமயக் கொள்கைகளையெல்லாம் சாதனையில் செய்துவந்தார். அமைதியுடனும் அடக்கத்துடனும் சமயத்தைப் போற்றிவந்த இவருக்குப் பொது மக்களிடையேயும் போதிய ஆதரவு இருந்து வந்தது.

தமிழ் மக்களிடையேயும், பொதுவாக இலங்கை மக்களிடையேயும் அவருக்கு அபிமானமும் விசுவாசமும் இருந்தது. தெளிந்த அறிவும் தூய சிந்தனையும் கொண்ட இவர் தமது மனச்சாட்சிக்கு விரோதமாக என்றுமே நடந்ததில்லை. சோல்பரி அரசியல் சட்டத்துக்கு முந்திய காலத்திலேயே அகில இலங்கைக் காங்கிரசுக்கும் யாழ்ப்பாண சங்கத்துக்கும் அதிக ஒத்தாசை புரிந்து வந்தார். மக்கள் நலன் கருதி இந்த இரு ஸ்தாபனங்களுக்கும் ஏனைய சங்கங்களுக்கும் அரிய சேவையாற்றினர். நல்ல தமிழனாக வாழ்ந்த இவர், சிங்கள மக்களின் உற்ற நண்பனாகவும் இருந்தார்.

### உயர்ந்த தரம்

திரு. அருளம்பலம் அவர்களின் சொற்பொழிவுகளை நான் பல தடவைகள் கேட்டதுண்டு. அவரது சொற்பொழிவுகள் உயர்ந்த தரத்தை அடைந்திருந்ததை எப்பொழுதுமே காணமுடிந்தது. மாணவனாக இருந்தபோது திரு. அருளம்பலம் அவர்கள் வண. எதிரிசிங்கி அவர்களிடம் பேச்சுப் பயிற்சி பெற்றார்.

நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை செய்த திரு. அருளம்பலம் அவர்களை நாட்டுக்கு ஈந்த அவர்களின் பெற்றோர்கள் பெருமையை மறக்க முடியாது.

திரு. அருளம்பலம் அவர்களின் சமய ஈடுபாடும், பொது நல சேவையும் என்றும் மறக்க முடியாதவை.

இலங்கையின் கூட்டுறவு இயக்கத்துக்கும் திரு. அருளம்பலம் அவர்கள் ஆற்றிய அரிய தொண்டுகள் யாவரும் அறிந்ததே. கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக இவர் நாட்டுக்குச் செய்த பணிகளை நினைத்து நான் வியப்படைந்ததுண்டு. திரு. அருளம்பலம் போன்ற ஒருவர் வெகு இலகுவில் எமக்குக் கிடைத்துவிடுவது அருமை. அவரின் குலப்பெருமை பற்றியும் குடும்பப் பெருமை பற்றியும் ஸ்ரீ ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியிலிருந்து அறிந்து கொள்ளலாம். அது வருமாறு:

தமிழரசர் காலந் தொடங்கி இதுகாறும், உயர்குடிப் பிறப்புப் பரம்பரைச் செல்வங் கல்வித் திறமை அதிகாரம் லோகோபகார முயற்சி நற்குணம் என்னும் எல்லாவற்றிலும் எத்துணைப் பிரபுக்களாலும் முதன்மரியாதை செய்யப்படும் வமிசத்தவர் உடுப்பிட்டியிலே ஒருவித்தியாசாலை தாபித்துத் தமிழ் இங்கிலிசு வைத்தியம் முதலியன கற்பிக்குமாறு செய்து, பற்பல பிள்ளைகளைத் திருத்தியும் வியாதியாளர்களுக்குத் தரும வைத்தியஞ் செய்வித்துங் கிரிதீபம் போல வாழ்ந்த மகாப் பிரபுவாகிய அருளம்பல முதலியார்.

# அரசாங்க ஊழியர்கள்

## கார்ப்பரேஷன்களுக்கு இடமாற்றம்

## நிதி மந்திரி தயாரிக்கும் புதிய திட்டம்

கொழும்பு, புதன்

அரசாங்க கார்ப்பரேஷன்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களை இடமாற்றஞ் செய்துவைப்பதற்கான பூர்வாங்கத் திட்டங்களை நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தயார்செய்து வருகிறார். ஒரு கார்ப்பரேஷனிலிருந்து வேறொரு கார்ப்பரேஷனுக்கும் இந்தத்திட்டத்தினால் உத்தியோகஸ்தர்கள் இடமாற்றஞ்செய்யப்படுவர் எனத் தெரிகிறது.

வருகிற இரண்டு அல்லது மூன்றுவாரகாலத்தில் இந்தத் திட்டம் வரையறைசெய்யப்பட்டுமுடியும் எனத் தெரிகிறது. திட்டம் பூர்த்தியாக வரையப்பட்டதும் நிதியமைச்சர், பிரதிநிதிகள்சபையில் அதைச்சமர்ப்பிப்பார்.

## வவுனியாவில் நெற்காணிச் சட்டம்

வவுனியா, புதன்

அடுத்தவருட முற்பகுதியிலிருந்து நெற்காணிச்சட்டத்தை வவுனியாவில் அமுல்நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான பூர்வாங்க வேலைகளைச்செய்யுமாறு கிராமவிதானைகளும், விவசாய உத்தியோகஸ்தர்களும் கேட்கப்பட்டுள்ளார்கள்.

இப்பொழுதும் இச்சட்டம் அமுலாக்கப்பட்ட பின்னரும் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளுமாறு வவுனியா காரியாதிகாரி திரு. டி. முருகேசபிள்ளை கேட்டுள்ளார்.

## 'திட்டமிடப்பட்ட கல்வி வேண்டும்'

இரத்தினபுரி, புதன்

"நன்றாகத் திட்டமிடப்பட்டுக் கவனஞ்செலுத்தப்படாவிட்டால் எந்தவிதமானதேசிய கல்வி முறையும் பயனளிக்காது" இவ்வாறு கொழும்பு சி. எம். எஸ். மகளிர் கல்லூரி அதிபர் செல்வி எம். ஈ. சைமன் பேர்கஸன் உயர்தரப் பள்ளிக்கூட பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கூறினர்.

பள்ளிக்கூடத்தின் ஸ்தாபக இயக்கத்தினர், பேராசிரியர் ஜே. எல். சி. ரொட்றிக்கோவையும், திருமதி ரொட்றிக்கோவையும், செல்வி எம். ஈ. சைமனையும் அழைத்திருந்தனர். செல்வி எம். ஈ. சைமன் பரிசில்களை வழங்கினர்.

## வாதநோய்

சிலாபம், புதன்

சிலாபம் கடற்கரை வீதியைச் சேர்ந்த அந்தோனி என்னும் இருவயதுடைய சிறுவனுக்கு இளம்பிள்ளை வாதநோய்கண்டு கொழும்பு லேடி றிஜ்வே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளான்.

பிங்கிரியாவைச் சேர்ந்த அஞ்சல் அப்புகாமி என்னும் 12 வயதுடைய சிறுவனும் இந்நோய்கண்டு கொழும்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

## ஐயாறன் எழுதுவது

இப்போது யாழ்ப்பாணத்திலே கடும் வெயில். பகலில் அனல் காற்று வீசுகிறது. தாங்க முடியவில்லை. ஆபீசுக்குள்ளாகவே இப்படியென்றால் தெருவிலே வெறுங்காலுடன் நடக்க வேண்டியிருப்பவர்களைப்பற்றி என்ன சொல்ல. அவர்களை நினைத்துக்கொண்டு ஒருவித ஆறுதலடைந்தேன்.

இரவிலும் புழுக்கம் அதிகம். தூக்கம் வரவில்லை என்கிறார் நண்பரொருவர். ஆனால் என் விஷயம் வேறு. படுத்து 5 நிமிடங்களுக்குள் குறட்டைதான் நேற்றிரவு பல தொந்தரவுகள். தூக்கம் கலைந்தது. தூக்கமில்லாவிட்டால், உடலாகிய இந்த மெஷின் சரிவர வேலைசெய்ய மறுக்கிறது. பேனாவை எடுக்கவே மனமில்லை. என்ன செய்வது!

* * *

இங்கு மட்டுமல்ல, தஞ்சாவூர், திருச்சி, மதுரை எல்லா இடங்களிலுமே கோடை வெயில் கொளுத்துகிறது. இலங்கையிலும் அதிக வெயில் உண்டோ என்று அங்கிருந்தவர் ஆவலுடன் விசாரித்தார்கள். அவ்வளவு அதிகமில்லை என்று சொல்லிவைத்தேன்! ஆனால் இங்குவந்தால் இங்கும் அப்படித்தான் உள்ளது!

கோடையிலே அங்கெல்லாம் மூலைக்குமூலை தண்ணீர்ப் பந்தல்கள் வைத்து தர்மம் நடக்கிறது. குளிர்ச்சியாக நீர்மோர் கொடுக்கிறார்கள். சில இடங்களில் பானமும் கொடுக்கிறார்கள். அந்த மாதிரி இங்கும் பல இடங்களிலும் தண்ணீர்ப் பந்தல் தர்மம் செய்ய முன்வருவது நல்ல புண்ணியமாவதுடன், மேலான சமூக சேவையுமாகும்.

* * *

பங்குனி மாதம்தான் யாழ்ப்பாணத்தில் மிக மோசமான மாதமென்றும், என்றாலும் இப்போதுதான், தென் இலங்கையிலிருந்தும் அதிகமானவர்கள் இங்கு வந்து "தேவாமிர்தம்" போன்ற பனங்கள்ளைப் பருகி வருவதாகவும் ஒரு ருசியான கட்டுரையை, அன்பரொருவர் ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் எழுதியுள்ளார்.

இப்போது மூலைக்குமூலைகள் தாராளமாக விற்கப்படுகிறது.

* * *

நேற்று ஒரு சைவ அன்பர் வந்து இதைப்பற்றிப் புகார் செய்தார். மதுபானம் அருந்திவிட்டு, சிலர் கோயிலுக்கு வருவதாயும், மதுபானம்தான் யாழ்ப்பாணத்தை முன்னேற முடியாதபடி தடுப்பதாயும் சொல்லி வருந்தினர்.

சில நாட்களுக்கு முன் இங்கு நடந்த ஆணழகன் போட்டியின் முடிவுகளை அறிவித்த பின், ஒருவித மதுபானத்தை விளம்பரம் செய்து விற்பனை செய்ததாயும், இது சற்றும் விரும்பத்தக்கதல்லவென்றும் மற்றோர் அன்பர் எழுதுகிறார்.

இதைப்பற்றி கந்தோருக்கு வந்த ஆணழகனை விசாரித்தேன். அது மதுபானமல்லவென்று மறுத்தார்.

* * *

இதை எழுதி முடிக்கும்போது எங்கிருந்தோ மேகங்கள் வந்துவிட்டன. தூற்றலும் படபடவென்று அடிக்கிறது. குளிர்காற்று சுகமாக வீசுகிறது. எந்தக் கஷ்டமும் துன்பமும் நீடித்திராதென்பதற்கும், நல்லகாலம் நிச்சயம் வருமென்பதற்கும் இது ஓர் அத்தாட்சியாயும் நம்பிக்கையளிப்பதாகவும் இருக்கிறது.

# பரிசளிப்பு விழாவின்போது உதைபந்தாட்டகாட்சிப் போட்டி

## இம்மாதம் 8ம் திகதி நடைபெறும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப போட்டியில் சாம்பியனை வெற்றியீட்டிய தபால் இலாகா கோஷ்டிக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கும் பரிசளிப்பு விழா இம்மாதம் 8-ந் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. இப்பரிசுகளை நீதியரசர் டாக்டர் எச் டபிள்யூ. தம்பையாவழங்குவார்.

இதற்கு முன் அன்று மாலை இரண்டுகாட்சி உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும். முதல் ஆட்டத்தில் சென் ஜோன்ஸ் கல்லூரிக் கோஷ்டியும், அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்க "பி" பிரிவுக் கோஷ்டியும் கலந்துகொள்கின்றன. இரண்டாவது ஆட்டத்தில் தபால் பகுதிக் கோஷ்டியும் அரசாங்க ஊழியர்'ஏ' பிரிவுக் கோஷ்டியும் கலந்து கொள்ளுகின்றன.

---

## விளையாட்டுச் சங்க புதிய உத்தியோகஸ்தர்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதி சுகாதார இலாகாவினரின் விளையாட்டுச் சங்கத்தின் இவ்வருடத்துக்கான உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 2-ம் திகதி நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தின் போதே இத் தெரிவு நடைபெற்றது.

தலைவர்: டாக்டர் ஜி. என். ஆர். நதானியல், உபதலைவர்: டாக்டர் எம் கனகரத்தினம், டாக்டர் வி சிவஞானசுந்தரம். கௌரவகாரியதரிசி: திரு. எஸ். எச். காசேவி, உதவி காரியதரிசி: திரு. ஆர். சொர்ணலிங்கம், கௌரவ பொருளாளர்: திரு ஏ தளய சிங்கம், கிரிக்கட் காரியதரிசி: திரு டி. யோகராஜ், கிரிக்கட் காப்டன்: டாக்டர் வி. மையில்வாகனம், டென்னிஸ் காரியதரிசி: திரு. ஏ. வி. தம்பிப்பிள்ளை, டென்னிஸ் காப்டன்: திரு. எஸ். எல். முத்தையா, உதைபந்தாட்ட காரியதரிசி; திரு. எஸ். தம்பையா, உதைபபந்தாட்ட காப்டன்: திரு. எஸ். கணேசன், கைப்பந்தாட்டக் காரியதரிசி: திரு. பி. தேவராஜா, கைப்பந்தாட்டக் காப்டன்: திரு. வி. சின்னப்பு.

---

## பெரிய கல்லாறு சித்திவிநாயகர் மகா கும்பாபிஷேகம்

மட்டக்களப்பு, புதன்

பெரிய கல்லாற்றில் புதிதாக உருவாக்கப்பட்ட ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயக தேவஸ்தானத்தில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ. சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானுக்கும் ஸ்ரீ சிவகாமி சமேதசித்தபேசப் பெருமானுக்கும், ஸ்ரீ வ்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியப் பெருமானுக்கும், நவக்கிரகம், வைரவர் முதலானமூர்த்திகளும்,ஜீவந்த ரிஷபலக்கின சுபமுகூர்த்தத்தில் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. புதியவிக்கிரகங்கள் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

கும்பாபிஷேக கிரியைகள் அனைத்தும் பருளாய் சிவசுப்பிரமணிய தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ சு. வேதாரணியேஸ்வரக் குருக்கள் தலைமையில், நவாலி அஸ்டகிரிக்கந்த தேவஸ்தான குரு. பிரம்மஸ்ரீ. சாமி விஸவநாதக் குருக்களால் நடத்தப்பட்டன. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து விஷேட அபிஷேகங்களும், பூசையும் திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன.

---

## வதிரீ டைமன்ஸ் வெற்றி

வதிரி, புதன்

வதிரியில் நடைபெறவிருக்கும் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக வதிரிடைமன்ஸ்கோஷ்டியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இளம் வாலிபர்கள் அடங்கிய கோஷ்டி ஒன்று, சென்ற ஞாயிற்றுக்கிழமை ஆரம்ப விளையாட்டாக கரவெட்டி யூனியன் கோஷ்டியுடன் விளையாடியது. விளையாட்டு முடிவில் வதிரி டைமன்ஸ் கோஷ்டி கரவெட்டி யூனியன் கோஷ்டியை 2-1 புள்ளிகளால் தோற்கடித்தது.

---

# காதலில் தோல்வியுற்ற இளைஞர் தற்கொலை

ரக்குவானை, புதன்

'காதலில் தோல்வி கண்டால், தங்களது உயிரை மாய்த்துக்கொள்வது, இப்போது இளைஞர்களிடையே சர்வ சாதாரணமாகிவிட்டது.'

ரக்குவானை வீரலுஹமுல்ல என்ற இடத்தைச் சேர்ந்த 22 வயதுள்ள ஆர் புத்ததாசா என்ற இளைஞனின் மரணம் குறித்து நடைபெற்ற விசாரணையின்போது, திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. டி. டி. எக்கநாயக்கா மேற்கண்டவாறு கூறினர்.

புத்ததாசாவுக்கும் ஒரு பெண்ணுக்குமிடையில் கடந்த மூன்று வருடங்களாக காதல் தொடர்பு இருந்ததென்றும், ஆனல் விஷயத்தை அறிந்த மூத்த சகோதரர்களும இனத்தவர்களும் அதை வெறுத்ததின் பயனாய் கடந்த மார்ச் மாதம் 31-ம் திகதி புத்ததாசா நச்சுத் திராவகம் உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டாரென்றும் கூறப்படுகிறது.

காதல் தோலவியினல் தற்கொலை செய்துகொண்டார் எனத் தீர்ப்பளித்த திடீர்மரண விசாரணை அதிகாரி; தங்களது மனதைக் கட்டுப்படுத்த முடியாத இளைஞர்கள் தற்கொலைப் பாதையை நாடுகின்றனரென்றும், அப்படிப்பட்டவர்கள் காதலில் ஈடுபடக் கூடாதென்றும் கூறினர்.

---

## தோட்டங்களை பாதுகாக்க புதிய மசோதா

கொழும்பு, புதன்

இலங்கையிலுள்ள தேயிலை, ரப்பர், தென்னை, கொக்கோத் தோட்டங்கள் படிப்படியாகத் துண்டாடப்பட்டு வந்துள்ளன. பெருந்தோட்டங்கள் சிறு தோட்டங்களாகிச் கலவுகளும் அதிகரித்து வருமானமும் குறைந்து வருகின்றது. தோட்டங்கள் துண்டாடப்படுவதைத் தடுப்பதற்கான அரசாங்க மசோதா தேயிலை, ரப்பர் தோட்டங்கள் மீது மட்டுமே இப்போது செல்லுபடியாகிறது. தென்னை, கொக்கோத் தோட்டங்கள் மீதும் அரசங்கத்தின் தடுப்பு மசோதாவை அமுல் செய்வது பற்றி தடுப்பு இயக்க சபையிடம் காணி, விவசாய மந்திரி திரு. சி. பி. டி' சில்வா யோசனை கேட்டுள்ளார்.

தடுப்பு மசோதாவை தென்னை, கொக்கோத் தோட்டங்களிலும் அமுல் செய்து இத்தோட்டங்கள் துண்டுபடாது கட்டுப்படுத்துவது பற்றிச் சகல எம். பி.க்களும் கூடிய கருத்துக்கள் கொண்ட அறிக்கையையும் பார்வையிடும்படி தடுப்பு இயக்க சபையைக் காணி மந்திரி கேட்டுள்ளார். சபை சாதகமான யோசனை தெரிவித்ததும் தென்னந் தோட்டங்களைத் துண்டாடல் தடுப்புச் சட்டத்தின் கீழ் கொண்டுவருவது பற்றி அரசாங்கம் தீர்மானம் செய்யும்.

---

## திருக்கோணமலையில் சுகாதாரச் சீர்கேடு

திருக்கோணமலை, புதன்

'ஒரு சுகாதாரப் பரிசோதகராவது எனது பகுதிக்குவந்து அங்கிருக்கும் சுகாதாரக் குறைகளைப் பார்வையிடுவதில்லை. நகரத்தின் சுகாதாரநிலை மிகவும் மோசமாக இருக்கிறது. இதுசம்பந்தமாக சபைத் தலைவர் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். என திருக்கோணமலை மாதாந்தக் கூட்டத்தில் பேசிய நகரசபை அங்கத்தவர் திரு இரத்தினவேலு தெரிவித்தார்.

டாக்டர் எஸ். சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. ஈ. சோமசுந்தரம் கூறியதாவது:-

சுகாதார வைத்திய அதிகாரி நகரத்தின் சுகாதார சேவைபற்றிக் கவனிக்காவிடில் அவரது ஸதானத்துக்கு வேறெருவரை நியமிக்கவேண்டும்.

நகரத்திலுள்ள சாப்பாட்டுக் கடைகள், தேநீர்க் கடைகள், பாண்போறணைகள் ஆகியவற்றைச்சுகாதார பரிசோதகர்கள் சென்று பார்வையிடுவதில்லை. இதன்காரணமாக இந்தஇடங்கள் நோய்களைப்பரப்பும் இடங்களாக மாறிவருகின்றன.

இந்த இடங்களை சுகாதார பரிசோதகர் சென்று பார்வையிட்டு இதுபற்றிய அறிக்கை ஒன்றை மாநகரசபைக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்னும் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது.

---

## புதிய வார்ட்டு திறப்பு விழா

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் குழந்தைகள் சிகிச்சை நிலையத்திற்கு மேல், புதிதாக கட்டப்பட்டிருக்கும் 'வார்ட்' திறப்பு விழா இம் மாதம் 6-ம் திகதி காலை 8-30 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

---

## தொழிற்பயிற்சி தேவை

குருநாகலை, புதன்

'தொழிற்பயிற்சி பெற்றவர்களே இன்று நாட்டுக்குத் தேவை. 'கல்வி அறிவோடு தொழிற்பயிற்சியுமிருந்தால் இளைஞர் தமது எதிர்காலத்தை வளமுறச் செய்வதோடு நாட்டின் முன்னேற்றத்துக்கும் உதவுவதாகவிருக்கும்.

இவ்வாறு மராமத்து இலாகா டைரக்டர் திரு. ...ச். செனிவரத்தின இப்பகமுவா அரசாங்க மத்திய பாடசாலையில் பொருட்காட்சி ஒன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

---

## தந்தியின் சோம்பல்

ஹிண்டகல, புதன்

கண்டி தபால்கந்தோரிலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள ஒரு இடத்தில் வசிக்கும் ஒருவருக்கு, கண்டி போஸ்மாஸ்டரினல் அனுப்பப்பட்ட ஒரு தந்தி நாலரை மணி நேரத்துக்குப் பின்னர் உரியவரிடம், கிடைத்தது. குறிப்பிட்ட தந்தி, தபால் கந்தோர் மேசையொன்றின் மீது இரண்டுமணிநேரத்துக்குஅதிகமாக இருந்ததென்றும் தந்தி சேவகர்கள் பற்றுக்குறைவினல் தான் அத்தந்தி, உரியவரிடம் போய்ச் சேருவதில் தாமதம் ஏற்பட்டதென்றும் தெரிய வருகிறது

---

## கண்டிய விவசாயிகள் புனருத்தாரணம்

### கமிட்டி நியமனம்

கொழும்பு, புதன்

கண்டிய விவசாயிகளின் புனருத்தாரணம்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு 14 அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை கைத்தொழில், கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா நியமித்திருக்கிருர். இக்கமிட்டிக்கு திரு. குமாரசிங்க தலைமைவகிக்கிருர். ஏப்ரல் 10-ம் தேதி கமிட்டியின் முதல் கூட்டம் நடைபெறும்.

---

## திருக்கேதீச்சரத்தில் 2-ந் திருவிழா

திருக்கேதீச்சரம், வியாழன்

திருக்கேதீச்சர ஆலய அலங்காரோத்சவ மூன்ரும் நாள் விழா இன்று மட்டக்களப்பு சைவ அடியார்கள், மட்டக்களப்பு அரசினர் சிரேஷ்ட பாடசாலை, அரசினர் ஆசிரிய பயிற்சி கலாசாலை ஆகியோரால் நடாத்தப்படுகிறது.

---

## சீன பற்றி ரஷ்ய பத்திரிகை

மாஸ்கோ, ஏப்ரல் 4

சீனவில் பொருளாதார நிலையும், உணவு நிலையும் மோசமடைந்துவருவதாய் பிராவ்டா பத்திரிகை எழுதியுள்ளது.

---

## டாக்டர்கள் அன்புடன் நடக்கவேண்டும்

சென்னை, ஏப்ரல் 4

இளம் டாக்டர்கள், நோயாளிகளிடம் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் கல்லூரி மாணவர்கள் ஒழுக்கத்துடனும், கட்டுப்பாடுடனும் நடந்துகொள்ள வேண்டும் என்றும், இதை ஒரு தாய் என்கிற முறையில் அறிவுரையாக கூறுவதாகவும், தமிழ் நாடு சுகாதார மந்திரி ஸ்ரீமதி ஜோதிவெங்கடாசலம் கீழ்ப்பாக்கம் வைத்தியக் கல்லூரி ஆண்டுவிழாவில் பேசுகையில் கூறினர்.

இளம் டாக்டர்கள் சரியாக நடந்து கொள்ளுவதில்லை என்று தமக்கு புகார்கள் வந்திருப்பதாகவும் இனியும் இம்மாதிரி புகார்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்றும் சுகாதார மந்திரி கூறினர்.

இவ்விழாவிற்கு தலைமை வகித்த தமிழ்நாடு கவர்னர் ஸ்ரீவிஷ்ணுராம் மேதி பேசுகையில், ஏழைகளின் நோயை தீர்ப்பதில் இளம் டாக்டர்கள் ஆர்வம் காட்ட வேண்டும் எனறு கூறினர்.

---

# வான் - லொறி மோதல்

## இருவருக்கு காயம்

யாழ்ப்பாணம், வியாழன்

எதிராக வந்த மோட்டார் வானும் லொறியும் மோதிக் கொண்டதனல் இரு வாகனங்களும் சேதத்திற்குள்ளானதோடு இருவர் காயங்களுடன் ஆஸ்பபத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்வம் காரை நகர் வலன்தலை மேற்கு ரேட்டில் நேற்று பகல் நடைபெற்றது.

இடைப்பிட்டி காரைநகரைச் சேர்ந்த கே. சிவப்பிரகாசம், காரை நகர் தங்கோடையைச் சேர்ந்த எம். ஆறுமுகம் ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட லொறி குறிப்பிட்டவானை சிறிது நேரத்திற்கு முன் காரை நகரை நோக்கிக் கடந்து சென்றதெனவும், சிறிநேரத்தில் எதிராகத் திரும்பி வந்த லொறி மோதிக்கொண்டதெனவும் சொல்லப்படுகிறது.

சம்பந்தப்பட்ட லொறி சங்கரப்பிள்ளை அன். சன்ஸ்சுக்குச் சொந்தமான தெனவும், வான் காரை நகரைச்சேர்ந்த கிராமசபை அங்கத்தவர் கே. ஆறுமுகத்திற்குச் சொந்தமான தெனவும் சொல்லப்படுகிறது. இருபகுதியினரும் இவ்வீதியில் வான்சேவை நடத்துபவர்களெனவும் போட்டியிருப்பதாகவும் தெரிகிறது.

---

## கூச்சலிட்ட பெண் கொலை

### பாகிஸ்தானியர் வெறிச்செயல்

ஜம்மு, ஏப்ரல் 4

இங்கிருந்து 45 மைல் தூரத்திலுள்ள சாம்ப் எல்லையில், ஆயுதந்தரித்த பாகிஸ்தானியர்களால் ஒரு பெண் கொலை செய்யப்பட்டாள் என்று தகவல் கிடைத்திருக்கிறது.

ஆடுமாடுகளைத் திருடிப் போவதற்காக, இரவு நேரத்தில் எல்லையைத்தாண்டி 10 பாகிஸ்தானியர்கள் கிராமத்திற்குள்ளே நுழைந்துள்ளனர் என்றும், அதைக் கண்டுவிட்ட பெண் ஒருத்தி கூச்சலிடவே, பாகிஸ்தானியர்கள் துப்பாக்கியால் உடனே அவளைச் சுட்டுக்கொன்று விட்டனர் என்றும் அந்தத் தகவல் கூறுகிறது.

சில ஆடு மாடுகளையும் திருடிக்கொண்டு அந்த கொள்ளையர்கள் தப்பியோடிவிட்டனர்.

---

# 'போலி நடனபாடசாலைகளுக்கு மான்ய உதவியை நிறுத்துக'

## மந்திரிக்கு கோரிக்கை

கொழும்பு, புதன்

போலி நடனப்பாடசாலைகளையும் அப்பாடசாலைகளுக்கு அளிக்கப்படும் மானியங்களையும் நிறுத்தும்படி செனட்டர் றெஜி பெரேரா, கைத்தொழில் வீடமைப்பு, கலாச்சார மந்திரியிடம் கேட்கவிருக்கிருர்.

இது பற்றி செனட்டர் றெஜி பெரேரா தெரிவிக்கையில், சுமார் நூறு நடனப் பாடசாலைகள் அரசாங்கத்திடமிருந்து பொருளுதவிகள் பெறுகின்றன வென்று தாம் நம்புவதாகவும் ஆனல் ஒரு வருடத்துக்கேனும் தொடர்ச்சியாக ஒரு நடனம் நடைபெறவில்லையென்றும் கூறினர்.

---

## திருச்சியில் ஹிந்தி மகாநாடு

திருச்சி, ஏப்ரல் 4

திருச்சி மாவட்ட ஹிந்தி ஆசிரியர்கள், பிரசாரகர்கள் மகாநாடு ஏப்ரல் 15-ந் தேதி, தென்னூர் ஹிந்தி பிரசார சபைக்கட்டிடத்தில் நடைபெறும். சென்னை மராமத்து இலாக்கா அமைச்சர் ராமையா, திருமதி சரோஜினி வரதப்பன் திரு. எஸ். ஆர். சாஸ்திரி ஆகியோர், மகாநாட்டில் பங்கு கொள்வார்கள்.

# 'மாநகரசபை விநியோகத் திட்டத்தை சீர்படுத்த வேண்டும்'

## மின்சாரக்குழுக் கூட்டத்தில் என்ஜினியர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்துக்கு மின்சாரத்தொகை விநியோகம் செய்வது சம்பந்தமாக ஏற்பட்ட தீர்க்கப்படாத தகராறுகள் காரணமாக சம்பந்தப்பட்ட அமைச்சரிடமிருந்து வந்த கடிதம்பற்றியும், தொகை விநியோகம் சம்பந்தமாக ஏற்பட்ட மேலதிக நிலுவைகள் கொடுப்பதுபற்றியும் மின்சாரக் குழுவின் முக்கிய கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகரசபை மின்சாரக்குழுவின் விசேஷ கூட்டம் திரு. பி. எஸ். சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. அரசாங்க மின்சாரப்பகுதி என்ஜினியர் திரு. ஏ. ஏ. குக்கும் மாநகரசபை என்ஜினியர், மேயர், முன்னாள் மேயர் திரு. டி. எஸ். துரைராசா, பதில்கணக்காளர், கணக்குப்பதிவாளர் உட்பட இக்குழு அங்கத்தவர்களும் கூட்டததில் கலந்துகொண்டனர்.

அரசாங்க மின்சாரப்பகுதி என்ஜினியர் திரு. ஏ. ஏ. குக் பேசுகையில் 1957-ம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் எழுதப்பட்டதென்றும், இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி சகல நிலுவைகள் யாவற்றையும் அரசாங்க மின்சாரப் பகுதிக்கு ஒப்பந்தம் எழுதப்பட்ட திகதி தொடக்கம் சட்டப்படி கட்டுப்பட்டுள்ளது.

சபையின் கருத்துப்படி 1957-ம் ஆண்டு சபைக்கும் அரசாங்க மின்சாரப் பகுதிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் சபை எழுப்பிய பல தீர்க்கப்படாத பிரச்சினைகள் காரணமாக நியாயமானதல்ல வென்று மேயர் தெரிவித்தார்.

இதுவிஷயம்மின்சாரப்பகுதி பிரதம என்ஜினியர் இடையேயும், மனேஜரிடையேயும் தீர்க்கப்படவேண்டிய ஓர் விவகாரம் என்று அரசாங்க மின்சார என்ஜினியர் பதிலளித்தார்.

இந்நிலையில் திரு. துரைராஜா பேசுகையில், மின்சார உற்பத்தி இயந்திரத்தை இயக்குவதில் செலவு ஏற்பட்டதென்று முதன்முறை குறிப்பிட்டது மகிழ்ச்சிகரமான ஓர் செய்தியென்று கூறினார். சில்லறை 'ரறிவ்' விகிததத்தை 25 வீதமாக அதிகரித்துள்ளார்கள் என்றும், அந்த நேரத்தில் அதிகரிக்கப்பட்ட 'ரறிவ்'நியாயமானதா இல்லையா எனபது பற்றி நிர்ணயிப்பதற்கு அவர்களால் முடியவில்லையென்றும் தெரிவித்தார்.

சபை தானகவே ஒரு மின்சார உற்பத்தி இயந்திரத்தை வைத்திருப்பது பற்றிய விஷயம்பற்றி உரையாடல் நடைபெற்றது.

யாழ்ப்பாண நகருக்கு ஒன்று பலாலி வீதி வழியாகவும், அடுத்தது காங்கேசன் துறை வீதி வழியாகவும், தொகை விநியோகததிற்குரிய மூலஸ்தலங்களை தன்து பகுதியினர் வைத்துள்ளார்கள் என்று அரசாங்க மின்சாரப்பகுதி என்ஜினியர் தெரிவித்தார்.

அவசர தேவைக்காக சபையால் வைத்திருக்கப்பட்டிருக்கும் மின்சார உற்பத்தி இயந்திரத்தை (ஸ்ரான் பை பவர் பிளான்ட்) மூடிவிடவேண்டும் என்று மாநகரசபைப் பதில் கணக்காளர் திரு. எஸ். முத்துத்தம்பி வற்புறுத்தினர்.

பிரதான மூலஸ்தலத்திலிருந்து மின்சாரம் தடைப்பட்டால, ஆஸ்பத்திரிக்குப் பாவிப்பதற்காக ஓர் பதில் மின்சார உற்பத்தி இயந்திரம் (ஸ்ரான் பை என்ஜின்) வைத்திருக்க வேண்டும் என்று ஆஸ்பத்திரி அதிகாரிகள் சிபார்சுசெய்துள்ளதாக அரசாங்க மின்சாரப் பகுதி என்ஜினியர் தெரிவித்தார்.

மின்சாரம் தடைப்படுவது சம்பந்தமாக அரசாங்க மின்சாரப் பகுதி என்ஜினியர் பேசுகையில் பிரதான கோளாறுகள் இருந்தாலொழிய சாதாரணமாக அரைமணி நேரத்துக்கு மேல் இந்தத்தடை ஏற்படாது என்றும், இப்படியான தடைகளை தனது பகுதியால் ஒரு மணி நேரத்துக்குள் சரிபார்த்துவிடமுடியுமென்றும் தெரிவித்தார்.

மேலதிக நிலுவைகளை நியாயமான முறையில் கொடுப்பது பற்றிய நகல் மகஜரைத் தயாரிக்கும்படி பதில் கணக்காளர் திரு. எஸ். முத்துத்தம்பியைக் கோரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

மேலதிக மின்மாற்றிகள் (டிரான்ஸ்போமர்)சம்பந்தமாக அரசாங்க மின்சாரப் பகுதி என்ஜினியர்பேசுகையில் யாழ்ப்பாண மாநகரசபை முதலில் தங்கள் விநியோகத் திட்டத்தைச் சீர்படுத்தவேண்டுமென்றும், இதற்குப்பின்னரே ஜெனரல் மனேஜருடன் சம்மதித்துக் கொள்ள வேண்டிய நிபந்தனைகளுக்கு இணங்க மின்சாரப் பகுதியினரிடம் மேலதிக மின்மாற்றங்கள் அமைக்கும்படி கோரவேண்டுமென்றும் தெரிவித்தார்.

கொழும்புத்துறையில் இருக்கும்மின் மாற்றி(டிரான்ஸ்போமர்) யினால் எதுவித பிரயோசனமும் சபைக்கு இல்லையென்றும் இப்பொழுது இந்த மின்மாற்றி பாவனைசெய்யககூடிய நிலையில் இல்லையென்றும் திரு. பீ. ச. சோமசுந்தரம் (தலைவர்)சுட்டிக்காட்டினர். அவர் மேலும்பேசுகையில், எந்த நேரத்திலாவது இக்கருவி வேலை செய்யாயல் நின்றுவிடுமென்றும், இக்குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு அவசரமான வழிவகைகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் தெரிவித்தார்.

இவ் விஷயத்தின் முக்கியத்துவம் கருதி கொழும்புத்துறையில் ஓர் 11கெவி டிரான்ஸ்போமர் சபையினது செலவில் உடனடியாக நிறுவவேண்டும் என்று அரசாங்க மின்சாரப் பகுதியின் பிரதமஎன்ஜினியர்-மனேஜரைக் கேட்டுக்கொள்வதென்றும், கொழும்புத்துறையிலிருக்கும் டிரான்ஸ்போமரை மினசார நிலையத்திற்குக் கொண்டுவருவதென்றும் சிபார்சுசெய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்க மின்சாரப் பகுதியினருக்கு 1961ம்ஆண்டு மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ஒக்டோபர் ஆகிய மாதங்களுக்குச் சேர்மதியான ரூபா. 307,534-15ஐ உடனடியாகச் செத்துமுகமாக நிலையான வைப்புப் பணத்திலிருந்து ரூ. 400-00ஐ மாற்றிக கொடுப்பதென்றும், பின்னர் மின்சார விநியோகத்தை சீர்செய்யும்முகமாகத் தேவைப்படும் ரூபா 500,000 கடனை அங்கீகரிக்கும்படி உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிப்பதென்றும் சிபார்சு செய்யப்பட்டது.

## மாஜி பிரதமர் கொலைவிசாரணை

கொழும்பு, புதன்

முன்னாள் பிரதமர் திரு.எஸ். டப்ள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொலைபற்றிய அரசியல் நோக்கம்பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்படவிருக்கும் கமிஷனில் அங்கம் வகிப்பதற்கு நீதிபரிபாலன சேவையில் பிரபலம் வாய்ந்த ஒருவரை இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கு இந்தியா இணங்கியுள்ளது.

இக்கமிஷனில் பணியாற்றுவதற்கு ஜனப் அட்லி ஜோனிஸ் என்பவரை ஐக்கிய அரபுக் குடியரசு நியமித்துள்ளது. இவர் அடுத்தமாதம் இலங்கை வந்துசேருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## வாக்குக்கணிப்பு யோசனை

### மைசூர் முதன் மந்திரி நிராகரித்தார்

பங்களூர், ஏப். 4

மைசூர் ராஜ்யத்துக்கும் மகாராஷ்டிரத்துக்கு மிடையிலுள்ள எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனவாக்குக் கணிப்பு நடத்தவேண்டுமென்று எதிர்க்கட்சியினர்கூறிய யோசனையை மைசூர் முதன்மந்திரி திரு.எஸ். ஆர். கன்டி நிராகரித்தார்.

மைசூர் சட்டசபை, கவர்னரின் உரைக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானத்தை நேற்றுநிறைவேற்றியது. இதற்கு முன் முதன் மந்திரி 'விசித்திரம்' என்ற வார்த்தையை உபயோகித்ததற்கு ஆட்சேபம் தெரிவித்து எதிர்க்கட்சியினர்வெளி நடப்புச் செய்தனர்.

## ஆசிரியர்களுக்கு தந்திமூலம வேலை நீக்கம்

கொழும்பு, புதன்

ஹட்டன் சென். ஜோன் பொஸ்கோ கல்லூரியைச் சேர்ந்த 9 ஆசிரியர்களைத் தந்திமூலமாகக் கல்வி இலாகா வேலைநீக்கம் செய்துள்ளது. இந்த 9 ஆசிரியர்களுக்கும் 1960-ல் கல்லூரி மனேஜர் நியமனம் வழங்கியிருந்தார்.

வேலைநீக்கப்பெற்ற ஆசிரியர்கள் 9 பேரும் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியிடம் முறையிட இருப்பதாகத் தெரிகிறது.

கடந்த மாதம் சென். ஜோன் பொஸ்கோ கல்லூரி, வித்தியாதிபதியின் நிருவாகத்தின் கீழ் உள்ள பள்ளிக்கூடமெனப் பிரகடனஞ் செய்யப்பட்டது.

# " வருவாய்க்கேற்ப செலவு செய்யுங்கள் "

## உணவு மந்திரி உபதேசம்

அம்பலாங்கொடை, புதன்

"ஒரு புதுவருட தினத்தன்று எனது பெண் குழந்தைக்குப் பணம் கொடுத்து வாங்கி புதுவருடபரிசு அளிக்க முடியாத நிலையிலிருந்தேன். அந்த நிலையில் தென்னைமரததாலான ஒரு எருமைப் பொம்மையை உருவாக்கி என் பெண்குழந்தைக்கு புதுவருடப் பரிசாகக் கொடுத்தேன். என் மகள் இதைப் பார்த்துத் திகைப்படைந்தாள்."

இவ்வாறு வர்த்தக உணவு கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன பலப்பிட்டியாவில் நிறுவப்பட்டுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் கிளை ஸ்தாபனமொன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. இலங்கரத்ன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'ஒருவர் தேவையற்ற எவ்வளவோ பொருள்களை நீக்கிவிடலாம். இதனல் பணமும் மிச்சப்படுகிறது. மேற்படி சம்பவம் இவற்றை எனக்கு அறிவுறுத்தியது.

மக்கள் தமது வருவாய்க்கேற்ப செலவு செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

வெளிநாட்டு ஆப்பிள்களும் முந்திரிப் பழங்களும் இல்லாது தாம் வாழமுடியாது என ஒரு பகுதி மக்கள் எண்ணுகின்றனர். ஆனல் இவை இல்லாது மக்கள் வாழமுடியும் என்பதை நான் கூற விரும்புகிறேன்.

தேசிய நலன் கருதியும், பொருளாதாரத்தை வளம்படுத்தவும் அவசிய தேவை இல்லாத வெளிநாட்டுப் பொருள்கள் இங்கு இறக்குமதி செய்வதை அரசாங்கம் கட்டுப்படுத்தியுள்ளது. ஒரு நாடு உண்மையான சுதந்திரத்தைப் பெற இதுவே வழி.

பஸ்ஸைக் காத்து கியூவில் நிற்பவர்களில் பலரகப்பட்ட மனிதர்கள் இருப்பார்கள். அரசாங்கத்தின் நோக்கம இவர்கள் எல்லோருக்கும் பாரபட்சமில்லாது பஸ்ஸில் இடம் கொடுப்பதே.

ஸ்தலஸ்தாபன விடமைப்பு மந்திரி திரு. மகாநாசாமரவீரா பேசுகையில் கூட்டுறவு ஸ்தாபனங்களில் ஊழல்கள் இருந்தால் அவற்றை நீக்க மந்திரி ஒருபோதும் தயங்க மாட்டாரென்றும் அதன் நலன் கருதி அரசாஙகம் என்றும் கண்காணிப்பாக நடந்துகொள்ளுமென்றும் கூறினர்.

## கதம்ப விழா

காத்தான்குடி, புதன்

மட்டக்களப்புத் தெற்கு வட்டாரத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் பங்குகொள்ளும் கதம்ப விழா ஒன்று இம் மாதம் 7-ம், 8-ம் திகதிகளில் நடைபெற இருக்கின்றது. இவ் விழா ஆரயம்பதி மகா வித்தியாலத்தில் நடைபெறும். இயல், இசை, நாடகம் ஆகிய முப்பிரிவுகளையும் உடைய இவ் விழாவை வட்டார வித்தியாதரிசி திரு. எம். ஜே. சீமான்பிள்ளை ஒழுங்கு செய்துள்ளார்.

## வவுனியாவில் விவசாயக் கண்காட்சி

வவனியா, புதன்

வவனியாவில் இம் மாதம் 27, 28 -ம் திகதிகளில் ஓர் விவசாயக்கண்காட்சிவவனியா மகா வித்தியாலய மண்டபத்தில்நடைபெறவுள்ளது.காரியாதிகாரி திரு. முருகேசபிள்ளை இதற்கானஒழுங்குகளைச்செய்து வருகின்ருர்.

இவ் விழாவில் மாட்டு வண்டிச் சவாரி, கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆறுதல் சயிக்கிள் சவாரி என்பன நடபெற இருக்கின்றன.

# செக். மொழியில் ஈழத்து தமிழ் சிருஷ்டிகள்

## டாக்டர் காமில் ஜேல்லிபில் ஈடுபட்டிருக்கிருர்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கைப் பேச்சுவழக்கில் எழுதப்பட்டுள்ள சிறுகதைகளும் நாடகங்களும் செக் மொழியில் மொழிபெயர்க்கப்படவிருக்கின்றன.

மட்டக்களப்புத் தமிழ்,யாழ்ப்பாணத் தமிழ், திருக்கோணமலைத் தமிழ் என மூன்று ஈழத் தமிழ் கிளை மொழிகளில் எழுதிய சிருஷ்டிகளைப் பெறுவதில் செக்கோசிலவாக்கியாவிலுள்ள கீழைத்தேசக் கலைக் கழகத்தைச்சேர்ந்த டாக்டர் காமில் ஜேல்லிபில் ஈடுபட்டிருக்கிருர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. டொமினிக் ஜீவாவின் "இவர்களும் அவர்களும்", "கொச்சிக்கடையும் கறுவாக் காடும்", "ஞானம்" ஆகிய சிறு கதைகளை டாக்டர் ஜேல்லிபில் இதுவரையில் செக் மொழியில் பெயர்த்துள்ளார்.

ஈழத்துத் தமிழ்ச்சிருஷ்டிகளின் செக் மொழிபெயர்ப்புகளைப் பிரசுரிப்பதில் செக் பத்திரிகைகள், சஞ்சிகைகள், பிரசுராலயங்கள் மிகுந்த சிரத்தை காட்டுவதாகத் தெரிகிறது.

## வித்தியாதரிசிகளின் இடமாற்றம்

வவனியா, புதன்

வவனியா வித்தியாதரிசியாகக் கடமையாற்றிய திரு. எஸ்.சபாபதி முருங்கன்வட்டாரத்துக்கும், புளியங்குளம் வித்தியாதரிசி திரு. அழகையா வவனியா வட்டாரத்துக்கும், மன்னர் வட்டார வித்தியாதரிசி திரு. கே. நவரத்தினம் புளியங்குளத்துக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

மிகத் திறமையான

பவர்ஸ்

உரங்கள்

கிருமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்

லாபகரமாய் பயிரிட

- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்

கிடைக்குமிடம்

ஏ. பவர்

அன் கொம்பனி லிமிட்டெட்,

த.பெ. 11, கொழும்பு.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

வியாழன் 5-4-62

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 கே. செந்திநாதன்—பேச்சு. 7-15 நேயர் விருப்பம், 7-45 'கல்யாணத் தரகர்'—நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வயலின் யாசம், 9-30 குரல்வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி' அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 ரங்கமணி விஜயராகவன்—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 ரங்கமணி விஜயராகவன்—பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல் இசை, 2-10 தொழிலைத் தேர்ந்தெடுக்க— மாணவர் நிகழ்ச்சி, 2-30 இசைக்கோவை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'இம்மாதப் பாடல், 7-35 டி. கே. ராமநாதன்—பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி - எம். ஏ. கல்யாணகிருஷ்ண பாகவதர்—வீணை, 8-40 திரைப்பட இசை, 9-15 சுபத்த சங்கீதம், 9-30 அகிலபாரத இலக்கியநிகழ்ச்சி.

## ஆசிரியர்களுக்கு பிரிவுபசாரம்

வவனியா, புதன்

வவனியாக் கோவிபுற்க்துகுளம் இந்து தமிழ்ப்பாடசாலையில் உதவியாசிரியராகக் கடமையாற்றி மருதங்கேணி இந்து தமிழ்ப் பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்லும் திருஆ.கந்தையாவுக்கும், இவ்வருடம் வட இலங்கை சங்கீத சபை நடத்திய சங்கீத ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர் திரு.சு.நமசிவாயத்துக்கும் உபசரணைக்கூட்டம் இந்து தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் தலைமையாசிரியர் திரு. வி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. பலரும் பாராட்டிப் பேசினர்.

# நீல இல்லம் சாம்பியன்

## வித்தியானந்தக் கல்லூரி விளையாட்டுப் போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு, புதன்

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி அதிபர் திரு. வே. சோமசுந்தரம் கொடியை ஏற்றி போட்டியை ஆரம்பித்து வைத்தார். வவனியா மாவட்ட பாடசாலைகளின் வித்தியாதரிசி திரு எல். பி. கெரத் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர்.

### வெற்றிபெற்றோர் விபரம்:

19 வயதுக்குட்பட்ட திறமையான விளையாட்டு வீரர்கள்:

ஆண்: எஸ். நாகராசா (பச்சை இல்லம்)

பெண்: எஸ். பூரணகாந்தம் (நீல இல்லம்)

16 வயதுக்குட்பட்ட திறமையான வீரர்கள்:

ஆண்: எம். தவராசா (நீல இல்லம்)

பெண்: எஸ். கனகமணி (சிவப்பு இல்லம்)

13 வயதுக்குட்பட்ட விளையாட்டு வீரர்கள்:

ஆண்: எஸ. இராசையா (பச்சை இல்லம்)

பெண்: எஸ். இராசேஸ்வரி (மஞ்சள் இல்லம்)

10 வயதுக்குட்பட்ட விளையாட்டு வீரர்கள்:

ஆண்: கே. நவநீதன் (நீல இல்லம்) எம். பாலசிங்கம்,(சிவப்பு இல்லம்)

பெண்: எஸ். இராஜகுமாரி (சிவப்பு இல்லம்)

கயிறு இழுவை: நீலஇல்லம் ஈற்றில் நீல இல்லம் 123 புள்ளிகளையும், மஞ்சள் இல்லம் 122 புள்ளிகளையும், சிவப்பு இல்லம் 119 புள்ளிகளையும், பச்சை இல்லம் 107 புள்ளிகளையும் பெற்று நீல இல்லம் இவ்வாண்டு சாம்பியனாக வெற்றி ஈட்டியது.

—

கிரிக்கெட்

## கலைப்பகுதி மாணவர் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கலை, விஞ்ஞான உயர்தர வகுப்பு 2-ம் வருட மாணவர்களிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், கலைப்பகுதி மாணவர்கள் 2 விக்கடி 79 ரன்களால் வெற்றியீட்டினர்.

கலைப்பகுதி மாணவர்கள் முதலாவது இன்னிங்சில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 64 ரன்களையும், விஞ்ஞானப்பகுதி மாணவர்கள் முழு விக்கட்டுகளையும் இழந்து 76 ரன்களையும் எடுத்தனர் இரண்டாவது இன்னிங்சில் கலைப்பகுதி கோஷ்டி 8 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 123 ரன்களையும் விஞ்ஞானப் பகுதி கோஷ்டி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 32 ரன்களை எடுத்து சுவாரஸ்யமாக நடந்த இக் கிரிக்கெட் போட்டியில், கலைப்பகுதி மாணவர்கள் 2 விக்கட் 9 ரன்களால் வெற்றியீட்டினர்.

—

## புதுவருட விளையாட்டுப்போட்டி

தெல்லிப்பழை, செவ்வாய்

காங்கேசன்துறை குருவிளையாட்டுக் கழகம் ஐந்தாவது வருடாந்த விளையாட்டுப்போட்டியை புதுவருட தினத்தன்று நடத்துவதென முடிவுசெய்துள்ளது.

இம்முறை நடைபெறும் விளையாட்டுப்போட்டிகளுக்கு காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் அதிபர் திரு. ஏ. எஸ். மரியநாயகத்தை பிரதம விருந்தினராக அழைப்பதெனவும் விளையாட்டுக் கழகம் முடிவுசெய்துள்ளது.

—

## வட்டுக்கோட்டை கந்தசுவாமி கோவில் திருவிழா

வட்டுக்கோட்டை, புதன்

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீகந்தசுவாமி கோவில் மகோற்சவம் இம் மாதம் 10-ந் திகதி தொடக்கம் 10 நாட்களுக்கு நடைபெறும்.

—

## இரியானுக்கு துருப்புகள்

ஆம்ஸ்டர்டாம், ஏப் 4

மேற்கு இரியானுக்கு மேலும் துருப்புக்களை 'டச்' அரசாங்கம் அனுப்பியுள்ளது.


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது..




நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் [illegible] 37 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
த. பெ. 189,
கொழும்பு.

குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது

# கலை அரங்கம்

## 'மணியோசை'யில் கல்யாண்குமார்-விஜயகுமாரி

### 'கூன'னின் தியாகத்தைச் சித்தரிக்கும் படம்

ஏ. எல். எஸ். படநிலையத்தின் குறுகிய காலத் தயாரிப்பான 'மணியோசை' பரணியில் மின்னல் வேகத்தில் வளர்ந்து வருகிறது.

கல்யாணகுமார், நடிகவேள் எம். ஆர். ராதா, நாகையா, விஜயகுமாரி, முத்துராமன் ஆகியோர் நடித்த சிலகாட்சிகள் அண்மையில் வளர்ந்தன. அருவருப்பான தோற்றமுடைய தன் மகனை சிறுகுழந்தையிலே தன்மாமனாரிடம் ஒப்படைத்துவிடும் கொடுமையுள்ளம் நிறைந்த தந்தையாக இப்படத்தில் நடிகவேள் ராதா நடிக்கிறார். கூனனுகப் பிறந்துவிட்ட தன் மகனைக் கொன்றுவிடத் திட்டமிடுகிறான் தந்தை. ஆனால் அவனுடைய மாமனரோ இதைக்கண்டு நெஞ்சம் பதறுகிறார். அந்தக் குழந்தையைக் கொல்ல வேண்டாமென்று தடுக்கிறார். தான் அந்தக் குழந்தையை வளர்க்கும் பொறுப்பை ஏற்கிறார். ஆனால் தன்னுடைய குழந்தையென்றே சொல்வதாகவும் உண்மையான பெற்றோரைக் காட்டிக் கொடுப்பதில்லையென்றும் உறுதி கூறுகிறார். இதன் விளைவால் கூனன் இளைஞனை பின்னும் பல இன்னல்களைச் சமாளிக்க நேரிடுகிறது. தண்ணீர் வண்டியோட்டும் பொறுப்பேற்றுப். பல்வேறு இன்னல்களை அனுபவித்துப் பிறந்த வீட்டிற்கும் வளர்ந்த வீட்டிற்கும் பல தொண்டுகளைச் செய்கிறான். ஆனால் இறக்கும்வரை தன் தந்தையை அவன் தெரிந்து கொள்ளவில்லை. கூனனின்மீது இரக்கம் கொண்டு உதவினாள் இளம் பள்ளியாசிரியை. அந்த ஆசிரியையைக் கூனன் காதலித்தான். ஆனால் அவளோ அதை ஏற்கவில்லை. ஆனாலும் கூனனே அவளுக்குப் பல உதவிகள் செய்துவந்தான். ஊருக்கு உழைத்த தன் வாழ்க்கையைக் தியாகம் செய்து துயரக் கதையை உள்ளம் உருகும் முறையில் சிறந்த படமாக உருவாக்கி வருகிறாராம் இளம் இயக்குநர் மாதவன். கூனனின் பாத்திரத்தில் கல்யாண்குமாரும், கூனனின் தந்தையாக ராதாவும், வளர்ப்புத் தந்தையாக நாகையாவும், ஆசிரியையாக விஜயகுமாரியும், விஜயகுமாரியின் காதலனை முத்துராமனும் நடித்துவருகின்றனர். இப்படத்தின் திரைக்கதை, வசனத்தை பாசுமணி எழுதிவருகிறார். இசை கே. வி. மகாதேவன்.

2-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு)

பிளாஸா (வெள்ளவத்தை)

விஜயா (மட்டக்களப்பு)

பல வீரதீரச் செயல்கள் நிறைந்த சிறந்த கலர் படம்!

பார்த்து பயன் அடையுங்கள்!



சித்திரா • அசாக்

கிருஷ்ணகுமாரி நடித்த

ஜிம்போ

(தமிழ், முழுநீள கேவா கலர்ப் படம்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30-க்கு

எம். ஆர். ராதா நடித்த

உலகம் சிரிக்கிறது

மனோகரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30 க்கு

பிரேம் நஸீர், எம். என். ராஜம் நடித்த

இருமனம் கலந்தால் திருமணம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## ஒரே சமயத்தில் 6 படங்களுக்கு மேல் நடிக்கக் கூடாது

### நட்சத்திரங்களுக்கு ஏ. வி. எம். யோசனை

"நட்சத்திர நடிக, நடிகைகள் ஒரே நேரத்தில் ஏராளமான படங்களில் நடிப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும். நட்சத்திர நடிக, நடிகைகள் ஒரே சமயத்தில் 6 படங்களுக்கு மேல் நடிக்கக்கூடாது" என்று திரைபபடத் தொழிலதிபர் திரு. ஏ. வி. மெய்யப்பன் யோசனை தெரிவித்துள்ளார்.

திரைப்படத் தொழிலின் நலனையும் முன்னேற்றத்தையும் கருதி தொழிலில் ஒழுங்கு முறைகளும், கட்டுப்பாடுகளும் ஏற்படுத்திக்கொள்வது நலமென்று திரு. மெய்யப்பன் கூறினார்.

தென்னகத்தில் திரைப்படத் தொழில் இன்று மிகவும் மோசமான நிலைக்குச் சென்றுகொண்டிருப்பது பற்றி தமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்த திரு. ஏ வி. மெய்யப்பன் மேலும் கூறியதாவது:-

'திரைபபடங்களைத் தயாரிக்கப் பல புதியவர்கள் முன் வந்துள்ளனர். கச்சாப்படத்திற்கான அனுமதி இவர்களுக்கு வழங்கப்படுமுன் சில கட்டுப்பாட்டுகளை ஏற்படுத்துவதே நல்லது.

புதியவர்கள் இத்தொழிலுக்கு வருவதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் புதியவர்களுக்கு அனுமதி வழங்கும்போது சற்று எச்சரிக்கையாக இருப்பது நல்லது. ஏனெனில் இன்று திரைப்படத் தொழிலில் நுழைந்துள்ள சிலரால் நட்சத்திரங்களின் ஆதிக்கம் தலை தூக்கத் தொடங்கிவிட்டது. இதனல் திரைப்படத் தொழில் மோசமான நிலைக்குச் சென்றுகொண்டிருக்கிறது.

நட்சத்திர மயக்கத்தால் திரைப்படத் தொழில் கெட்டுவிடாமலிருக்க இத்தொழிலில் உள்ளவர்கள் தாங்களாகவே சிலகட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டாக வேண்டும்.

நட்சத்திர நடிக, நடிகைகள் 6 படங்களுக்கு மேல் ஒப்பந்தம் செய்துகொள்ளக்கூடாது. இம் மாதிரி வரம்பு ஏற்படுத்தினல் எல்லாப்படங்களையும் 8 மாதங்களுக்குள் எப்படியும் தயாரித்து வெளியிட முடியும். இயக்குநர்கள் மூன்று படங்களுக்கு மேல் ஒப்பந்தம் செய்துகொள்ளககூடாது. குணசித்திர நடிகர்கள் 12 படங்களுக்குத் தான் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.

திரைப்படத் தொழிலில் ஒன்று கூடி சுய கட்டுப்பாடு முறையை நடைமுறைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுப்பதே நலமென்றும் தனிப்பட்ட சிலரால் கட்டுப்பாடுகளைக் கொண்டுவர இயலாதென்றும் திரு. மெய்யப்பன் கூறினர்.

### தமிழில் 'தலாக்' ஸ்ரீதர் டைரக்ட் செய்வார்

இந்தியில் வெளி வந்த வெற்றிப்படமான 'தலாக்' என்ற படத்தை சம்பூர்ண படநிலையத்தினர் தமிழில் தயாரிக்கவிருப்பதாகத் தெரிகிறது. இப்படத்தை ஸ்ரீதர் டைரக்ட் செய்வாரென்றும் திரைக்கதைவசனத்தையும் அவரே எழுதுவாரென்றும் தெரிகிறது.

ஜெமினி கணேசனும் தேவிகாவும் முக்கிய பாகத்தில் நடிக்கவிருக்கும் இப்படத்தில் குழந்தை நட்சத்திரமொன்றும் முக்கிய பாகத்தில் நடிக்குமாம். விசுவநாதன் ராமமூர்த்தி இசையமைப்பார்களென்று தெரிகிறது.

### பம்பாயில் ரஞ்சன தங்கராசா கவர்னர் முன் நாட்டியவிருந்து

பம்பாய், ஏப். 4

இலங்கையிலிருந்து பம்பாய் வந்து சேர்ந்துள்ள திருமதி ரஞ்சன தங்கராசாவின் நடனக் குழுவினர் நேற்று இங்கு நாட்டிய விருந்தளித்தனர்.

பரதநாட்டியம், கண்டிய நடனம் ஆகியநடனங்களை ரஞ்சன தங்கராசா ஆடிக் காட்டினார்.

இந்த நாட்டிய நிகழ்ச்சிக்கு பாம்பாய் கவர்னர் திரு. ஸ்ரீ பிரகாசாவும் சமுகமளித்திருந்தார்.

### கொஞ்சும் சலங்கை 22 மொழிபேசும்

'கொஞ்சும்சலங்கை' படத்தின் நீளத்தைக்குறைத்து இடையிடையே விளக்கங்கள் கொடுத்து வெளிநாடுகளில் திரையிட தேவி பிலிம்சார் ஏற்பாடு செய்து வருகின்றனர். 22 மொழிகளில் இது போன்று விளக்க உரைகள் தயாரிக்கப்படுமாம்.

### புதுவருஷ படங்கள்

ரங்கநாதன் பிக்ஸர்ஸ் "படித்தால் மட்டும் போதுமா?" தமிழ்ப் புதுவருட தினத்தன்று திரைக்கு வரவிருக்கிறது.

சிவாஜிகணேசன், பாலாஜி, எம். ஆர். ராதா, முத்துராமன் கருணாநிதி, சதன், எஸ். வி. ரங்கராவ், சகஸ்ரநாமம், சாவித்திரி, ராஜசுலோசன, கண்ணும்பாள் ஆகியோர் நடிக்கும் இப்படத்தின் பாடல்களை கவிஞர் கண்ணதாசன் எழுதியுள்ளார் பீம்சிங் டைரகட் செய்துள்ள இப்படத்துக்கு விஸ்வநாதன் - ராமமூர்த்தி இசையமைத்துள்ளனர்.

ஃ ஃ ஃ

"தாயைக் காத்த தனயன்" தமிழ்ப் புதுவருஷ தினத்தன்று திரை கரு வரஇருக்கிறன்.

எம. ஜி. ஆர்., எம். ஆர். ராதா, அசோகன், சரோஜா தேவி, கண்ணும்பா ஆகியோர் நடிக்கும் இபபடத்தின் பாடல்களை கவிஞர் கண்ணதாசனே எழுதியுள்ளார். கே வி. மகாதேவன் இசையமைத்து எம். ஏ. திருமுகம் டைரக்ட் செய்துள்ள 'தாயைக் காத்த தனயனின்' வசனத்தை ஆரூர் தாஸ் எழுதியுள்ளார்.

ஆனந்தன், எம். ஆர். ராதா, வி. கே. ராமசாமி, புஷ்பலதா, ராஜ்ஸ்ரீ, மித்துலட்சுமி, ஆகியோர் நடித்துள்ள எம். ஏ. வி. படநிலையத்தாரின் 'செங்கமலத் தீவு' தமிழ்ப்புதுவருடத்தினத்தன்று திரைக்குவரவிருககிறது. ராஜேந்திரன் டைரக்ட் செய்யும் இப்படத்தின் வசனத்தை சேலம் நடராசன் எழுதியுள்ளார்.

## எம். ஜீ. ஆர். - சரோஜாதேவி நடிக்கும் "பாசம்"

### டி. ஆர். ராஜகுமாரியும் நடிக்கிறா

ஆர். ஆர். பட நிலையத்தார் தயாரித்துக்கொண்டிருக்கும் சமூகப்படத்திற்கு 'பாசம்' என்று பெயரிட்டுள்ளனர்.

இந்த உள்ளமுருக்கும் குடும்பச் சித்திரத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., எம். ஆர். ராதா, அசோகன், கல்யாண்குமார், டி. ஆர். ராமச்சந்திரன், டி. ஆர். ராசகுமாரி, புதுமுகம் சீலா ஆகியோர் நடித்து வருகின்றனர்.

திரைக்கதை வசனத்தை துறையூர் கே. மூர்த்தியும், பாடல்களை கவிஞர் கண்ணதாசனும் எழுதியுள்ளனர். விசுவநாதன்- ராமமூர்த்தி இசையமைத்து வருகின்றனர். ஒளிப்பதிவு ரஹிமான்.

முற்றிலும் புதுமைப்பாத்திரமேற்று எம். ஜி. ஆர். நடித்துவரும் இப்படத்தை ராமண்ணா இயக்கி வருகிறார். 'பாசம்' விரைவில் வெளி வருமாம்.

## நான்காவது கணவருக்கும் நடிகை டெய்லர் 'கல்தா'

பிரபல ஹாலிவூட் நடிகை எலிஸபெத் டெய்லர் தமது கணவர் எடிபிஷரிடமிருந்து பிரிந்து விவாகரத்துக்கோரப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரோம்நகரில் தயாராகி வரும் 'கிளியோபாட்ரா' என்ற பிரமாண்டமான தயாரிப்பில் நடித்து வரும் எலிஸபெத் டெய்லர் நிக்கிஹில்டன் என்பவரை தமது 18 வயதில் முதல் முதலாகத் திருமணம் செய்தார். பின்னர் அவரிடமிருந்து விவாகரத்துச் செய்துகொண்ட எலிஸபெத் டெய்லர் மைக்கேல் வைல்டிங் என்பவரை மணம் செய்து அவரையும் விவாகரத்துச் செய்த பின் மைக்டொட் என்பவரை மணந்தார். இவரையும் விவாகரத்துச் செய்து எடிபிஷரை மணந்த டெய்லர் இப்பொழுது அவரையும் விட்டுப் பிரிகிறார்.

29 வயதான எலிஸபெத் டெய்லர் 'கிளியோபாட்ரா'வில் நடிக்கும் ரிச்சர்ட் பேர்ட்டன் என்ற நடிகர் மீது காதல் கொண்டுள்ளதாக வதந்திகள் உலாவுகின்றன.

### ரூ. 4 லட்சத்தில் குழந்தைகள் படம்

நான்கு லட்சம் ரூபாய் செலவில் குழந்தைகள் கல்வி பற்றிய முழு நீளப்படமொன்றைத் தயாரிக்க பஞ்சாப் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

### 'கள்வனின் காதலி: வைஜயந்திமாலா நடிப்பார்

'கள்வனின் காதலி' இந்திப் படத்தில் வைஜயந்திமாலாவும் ராஜேந்திர குமாரும் நடிக்கவிருக்கின்றனர். வீனஸ் பிக்சர்சார் வர்ணத்தில் தயாரிக்கவிருக்கும் இப்படத்தை டி. பிரகாஷ் ராவ் டைரக்ட் செய்வார். இசையமைப்பு ஷங்கர் ஜெய்கிஷன்.

### ஜுபிடரின் 'வால்மீகி'

'வால்மீகி' என்ற படத்தை ஜுபிடர் பிக்சர்சார் தெலுங்கிலும் கன்னடத்திலும் தயாரித்து வருகின்றனர். இரு படங்களிலும் ராஜசுலோசன கதாநாயகியாக நடித்துவருகிறார்.